திருப்பூர் மாநகராட்சி

2025 மார்ச் மாதம் 03-ந் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானம் எண். 764

மற்றும்

அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொதுத் தீர்மானம்

திருப்பூர் மாநகராட்சி

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

முன்னிலை : திரு. ந.தினேஷ்குமார், M.I.B.,

மேயர்,

திருப்பூர் மாநகராட்சி.

பொருள் அட்டவணை:

764) திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள சாலைகளில் 878 சாலைகள், சாலை பதிவேட்டில் (UNIQUE CODE) பதிவேற்றம் செய்யப்படாமல் விடுபட்டுள்ளதால் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை போன்ற வளர்ச்சி பணிகள் நடைபெற்றுவரும் பகுதிகளில் சேதமடைந்த சாலைகளை புதுப்பிக்க இயலாமல் உள்ளது. மண் சாலைகளை தார் சாலைகளாகவும், சிமெண்ட் கான்க்ரீட் சாலைகளாகவும் தரம் உயர்த்த முடியவில்லை. மேலும் பழுதடைந்த தார் சாலைகளை புதிப்பிக்க இயலவில்லை. ஏற்கனவே உள்ள சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளதால் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் இதர மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து சாலைப் பதிவேட்டில் விடுபட்ட சாலைகளை சேர்த்து புதியதாக சாலைகளை அமைக்கவும், ஏற்கனவே உள்ள சாலைகளை செப்பணிடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் விடுபட்டுள்ள சாலைகள், புதியதாக உருவாக்கி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் மற்றும் ஆணையர் திருப்பூர் மாநகராட்சி பெயரில் தான கிரயம் செய்யப்பட்ட சாலைகளின் விபரங்களை சாலை பதிவேட்டில் சேர்க்க வேண்டியுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு, (இத்துடன் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

வ.எண்	மண்டலம்	மொத்த சாலைகள்	சாலைகளின் நீளம்
1.	மண்டலம் 1	238	23653.18 மீ
2.	மண்டலம் 2	306	39229.00 மீ
3	மண்டலம் 3	245	23363.00 மீ
4	மண்டலம் 4	89	11442.50 மீ
	மொத்தம்	878	97687.68 மீ

மேற்குறிப்பிட்டுள்ள 878 சாலைகளை UTIS இணையதள சாலை பதிவேட்டில் பதிவேற்றம் செய்யவும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள சாலைகளில் தவறுதலாக உள்ள இனங்களை திருத்தம் செய்யவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி கோரி கருத்துரு அனுப்பி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/6078/2024)

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு மேயர், ஆகியோர்களால் கொண்டு வரப்படும் பொது தீர்மாணம்.

01.04.2022 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட பொது வரி சீராய்வு அடிப்படையில், புதிதாக விதிக்கப்படும் சொத்துக்களுக்கான வரி குறைப்பதற்கு, அரசின் அனுமதி பெற நிறைவேற்றப்பட வேண்டிய பொது தீர்மானம்.

திருப்பூர் மாநகரில் பொதுமக்கள், பனியன் தொழில் சார்ந்த தொழிற்துறையினர், பல்வேறு வர்த்தக சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சியினர் மத்தியில் , கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் பிற மாநகராட்சிகளுக்கும், திருப்பூர் மாநகராட்சிக்கும் சொத்துவரி வரிவிதிப்பில் ஏற்றத்தாழ்வு உள்ளதால், பொதுமக்கள் மத்தியிலும், தொழிற்துறையினரிடத்திலும் மாமன்ற உறுப்பினர்களுக்கு பெரும் நெருக்கடியும், அதிருப்தியும் உருவாகி உள்ளதாக பல்வேறு மாமன்ற கூட்டங்களில் தங்களது கருத்துக்களை பதிந்து வந்தனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 30.03.2022ம் தேதிய 53ம் எண்ணிட்ட அரசாணையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் 01.04.2022 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.

மேற்படி அரசாணையின்படி, திருப்பூர் மாநகராட்சியில் 2008–09 முதல் நடைமுறையில் இருந்த கீழ்கண்ட மூன்று அடிப்படை மண்டலங்களுக்கான மதிப்புகள், 01.04.2022 முதல் **"காரணி"** அடிப்படையில் உயர்த்தப்பட்டு வரி விதிக்கப்பட்டு வருகிறது.

அ) 01.04.2008 முதல் 31.03.2022 வரை சொத்துவரி விதிப்பதற்கான அடிப்படை மண்டலங்கள் மற்றும் அதற்கான மண்டல மதிப்புகள்

மண்டலம் A– 2.35

மண்டலம் B – 1.80

மண்டலம் C – 1.40

ஆ) 31.03.2022ம் தேதிய 53ம் எண்ணிட்ட அரசாணையின் படி காரணி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டல மதிப்பு

வ. எண்	தற்போதைய மண்டலம்	ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு (ரூ.)	புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு		
			பரப்பளவு (ச.அடி) / உபயோகம்	உயர்வு செய்வதற்கான காரணி	புதிய மண்டல மதிப்பு (ரூ.)
1.	A	2.35	**குடியிருப்பு**		
			<=600	1.25	2.93
			601-1200	1.50	3.52
			1201-1800	1.75	4.11
			>1801	2.00	4.70
			தொழிற்சாலை	1.75	4.11
			வணிக பயன்பாட்டு கட்டிடங்கள்	2.00	4.70
			சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள்	1.75	4.11

வ. எண்	தற்போதைய மண்டலம்	ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு (ரூ.)	புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு		
			பரப்பளவு (ச.அடி) / உபயோகம்	உயர்வு செய்வதற்கான காரணி	புதிய மண்டல மதிப்பு (ரூ.)
2.	B	1.80	**குடியிருப்பு**		
			<=600	1.25	2.25
			601-1200	1.50	2.70
			1201-1800	1.75	3.15
			>1801	2.00	3.60
			தொழிற்சாலை	1.75	3.15
			வணிக பயன்பாட்டு கட்டிடங்கள்	2.00	3.60
			சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள்	1.75	3.15
3.	C	1.40	குடியிருப்பு		
			<=600	1.25	1.75
			601-1200	1.50	2.10
			1201-1800	1.75	2.45
			>1801	2.00	2.80
			தொழிற்சாலை	1.75	2.45
			வணிக பயன்பாட்டு கட்டிடங்கள்	2.00	2.80
			சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள்	1.75	2.45

இ) திருப்பூர் மாநகராட்சியின் ஆண்டு வாடகை மதிப்பில் சொத்துவரி மதிப்பு

1. பொது காரியங்களுக்கான வரி – 15.25%
2. கல்விவரி – 0.80%
3. நூலகவரி (பொது காரியங்களுக்கான வரியில்) – 10.00%

ஈ) 1 சதுர அடிக்கான வரி ஒப்புநோக்கு விபரம்

அடிப்படை மண்டலம்	உபயோகம்	31.03.2022க்கு முன்னர்	01.04.2022க்கு பின்னர்
A	**குடியிருப்பு**		
	600 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்	4.54	5.68
	601 – 1200 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்		6.81
	1201 – 1800 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்		7.95
	1801 சதுரடிக்கு மேல் உள்ள தார்ச்சு கட்டிடம்		9.09
	தொழிற்சாலை	9.08	15.9
	வணிகம்	13.62	27.26

அடிப்படை மண்டலம்	உபயோகம்	31.03.2022க்கு முன்னர்	01.04.2022க்கு பின்னர்
B	குடியிருப்பு		
	600 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்	3.47	4.35
	601 – 1200 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்		5.22
	1201 – 1800 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்		6.09
	1801 சதுரடிக்கு மேல் உள்ள தார்ச்சு கட்டிடம்		6.96
	தொழிற்சாலை	6.95	12.18
	வணிகம்	10.43	20.88
C	குடியிருப்பு		
	600 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்	2.70	3.38
	601 – 1200 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்		4.06
	1201 – 1800 சதுரடி வரை உள்ள தார்ச்சு கட்டிடம்		4.74
	1801 சதுரடிக்கு மேல் உள்ள தார்ச்சு கட்டிடம்		5.41
	தொழிற்சாலை	5.41	9.47
	வணிகம்	8.11	16.24

எனவே, பொது மக்கள், அரசியல் கட்சியினர் , தொழிற்துறையினர் மற்றும் வர்த்தக சங்கங்களின் எதிரொலியாக அனைவரும் பாதிப்புக்கு உள்ளாகாத வகையில் சொத்துவரியினை குறைத்து விதிக்க அரசின் சிறப்பு அனுமதி பெறுவதற்கு அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும், மாமன்ற மேயர் சார்பிலும் கொண்டு வரப்படும் பொது தீர்மானம்.

மன்றத்தின் 03-03-2025 ஆம் தேதிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொதுத் தீர்மானம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 31.03.2022ம் தேதிய 53ம் எண்ணிட்ட அரசாணையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் 01.04.2022 முதல் பொது சொத்துவரி சீராய்வு செய்திட ஆணை பிறப்பிக்கப்பட்டு அதன்படி நடைமுறைபடுத்தப்பட்டது.

மேற்படி அரசாணையின்படி திருப்பூர் மாநகராட்சியில் நடைமுறையில் இருந்த கீழ்கண்ட சொத்துவரி வரிவிதிப்புகளுக்கான வரிவிதிப்பு மண்டலங்களின் மதிப்புகள் உயர்த்தப்பட்டு, 01.04.2022 முதல் புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு வரிவிதிக்கப்பட்டு வருகிறது.

1. அடிப்படை மண்டல மதிப்பு மண்டலம் 'அ' ---------- ரூ.2.35
2. அடிப்படை மண்டல மதிப்பு மண்டலம் 'ஆ' ---------- ரூ.1.80
3. அடிப்படை மண்டல மதிப்பு மண்டலம் 'இ' ---------- ரூ.1.40

மேற்படி மண்டல மதிப்புகள் தமிழ்நாட்டிலுள்ள இதர மாநகராட்சிகளின் சொத்துவரி வரிவிதிப்பு மண்டல மதிப்புகளை காட்டிலும் அதிகமாக இருந்த நிலையில், புதியதாக உயர்த்தப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்புகள் காரணி அடிப்படையில் உயர்வு செய்யப்பட்டதால் குடியிருப்புகள், தொழிற்கூடங்கள் மற்றும் வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கான அரைவருட வரி நிர்ணயிக்கப்படுவதில், திருப்பூர் மாநகராட்சியில் மிகவும் அதிகமாக உள்ளதால், பொது மக்கள், தொழில்துறையினர், பல்வேறு வர்த்தக சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சியினர் மத்தியில் வரி உயர்வுக்கு மிகுந்த அதிருப்தி நிலவுவதால், நடைமுறையிலுள்ள சொத்துவரி விதிப்பினை குறைப்பதற்கு அரசின் அனுமதி பெற மாமன்ற கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும் பல்வேறு மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின்படி,

1) வரி செலுத்தாதவர்களிடமிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் தண்டத் தொகையாக ஒரு சதவீதம் வட்டி விதிப்பதை நீக்கம் செய்திட அரசினரிடம் கோரிக்கை விடுக்கவும்,
2) ஒவ்வொரு வருடமும் 6 சதவீத வரி உயர்வுகள் ஏற்படுத்துவதில் பொது மக்கள், தொழில்துறையினர், பல்வேறு வர்த்தக அமைப்பினர் மத்தியில் மாநகராட்சி நிர்வாகத்திற்கும், அரசுக்கும் அவப்பெயர் ஏற்பட்டு வருவதுடன், தற்போதைய சூழ்நிலையில் தொழில் நசிவு காரணமாக வரி உயர்வினை ஏற்று உயர்த்தப்படும் வரியினை செலுத்த ஆட்சேபனை செய்து வருவதால், 01-10-2024-ல் 6 சதவீதம் உயர்த்தப்பட்ட வரியினை ரத்து செய்திட அரசிற்கு கோரிக்கை விடுக்கவும்,
3) 2024-2025 ஆம் நிதியாண்டில் வரிவிதிப்பில் தப்பிய இனங்கள், கட்டிடத்தின் அளவிற்கு ஏற்ப வரி விதிக்கப்படாமல் கள ஆய்வில் கண்டறியப்பட்டவை, மின் இணைப்பு / பொது சரக்கு சேவை வரி ஆகியவற்றில் உபயோக மாறுதல் செய்யப்பட்ட வரி விதிப்புகளுக்கும், தனியார் நிறுவனம், ட்ரோன் சர்வே மூலம் வரி உயர்த்தி விதிக்கப்பட்டதில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பயனீட்டு கட்டணத்தை முன்தேதியிட்டு விதித்து, வரி வசூல் செய்வதை ரத்து செய்திடவும் அரசினரிடம் உரிய அனுமதி ஆணைகள் பெற உரிய கருத்துருக்கள் அரசிற்கு அனுப்ப மாமன்றத்தில் ஒருமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

(ஒம்)ந.தினேஷ்குமார்.எம்.ஐ.பி.,
மேயர்,
திருப்பூர் மாநகராட்சி.

/ உண்மை நகல் /

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி

2025 மார்ச் மாதம் 28-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற மாமன்றத்தின் 2025-2026 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கை (Budget 2025-2026) கூட்டத்தில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 765

2025 மார்ச் மாதம் 28-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானம் எண் 766 முதல் 872 வரை

திருப்பூர் மாநகராட்சி

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாமன்ற கூடத்தில் நடைபெற்ற திருப்பூர் மாநகராட்சியின் 2025-2026 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கை (Budget 2025-2026) கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

முன்னிலை : திரு. ந.தினேஷ்குமார், M.I.B.,
மேயர்,
திருப்பூர் மாநகராட்சி.

******

பொருள் அட்டவணை

765) திருப்பூர் மாநகராட்சியின் **2025 - 2026** ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கை மதிப்பீடு மற்றும் **2024 - 2025** ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு ஆகியவை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(பி1 / 132 / 2025)

தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

(ஒம்)ந.தினேஷ்குமார்,
மேயர்
திருப்பூர் மாநகராட்சி

/ உண்மை நகல் /

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு மாமன்ற கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

முன்னிலை : திரு. ந.தினேஷ்குமார், M.I.B.,
மேயர்,
திருப்பூர் மாநகராட்சி.

****

மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் சிறப்புத் தீர்மானம்.

1) இந்திய பாராளுமன்றத்திற்கான தொகுதி மறுவரையறை செய்வதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து வருவதை கண்டித்து கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

மேலும் இந்திய பாராளுமன்றத்திற்கான தொகுதி மறு வரையறை செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் விதமாக தென்னிந்திய முதலமைச்சர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினரை ஒருங்கிணைத்து இந்தியாவிற்கே உதாரணமாக கூட்டம் நடத்தி உரிமை நிலை நாட்ட நடவடிக்கைகள் மேற்கொண்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்** அவர்களை பாராட்டத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

சிறப்புத் தீர்மானம் ; இந்திய பாராளுமன்றத்திற்கான தொகுதி மறுவரையறை செய்வதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து வருவதை கண்டித்து, பெரும்பான்மையான மாமன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் ஒன்றிய அரசிற்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் இந்திய பாராளுமன்றத்திற்கான தொகுதி மறு வரையறை செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் விதமாக தென்னிந்திய முதலமைச்சர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினரை ஒருங்கிணைத்து இந்தியாவிற்கே உதாரணமாக கூட்டம் நடத்தி உரிமை நிலை நாட்ட நடவடிக்கைகள் மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) மாநிலங்களுக்கான ஆட்சி மொழிகளில் மும்மொழி கொள்கையினை திணிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் ஒன்றிய அரசினைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய தொகையினை விடுவிக்காமல் இருப்பதைக் கண்டித்தும் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

சிறப்புத் தீர்மானம் ; மாநிலங்களுக்கான ஆட்சி மொழிகளில் மும்மொழி கொள்கையினை திணிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் ஒன்றிய அரசினைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய தொகையினை விடுவிக்காமல் இருப்பதைக் கண்டித்து பெரும்பான்மையான மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் ஒன்றிய அரசினால் மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை குறைப்பு செய்வதற்கும், வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பணி நாட்களை குறைக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியத் தொகையினை விடுவிக்காமல் இருப்பதை கண்டித்து ஒன்றிய அரசிற்கு எதிராக கண்டன தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

சிறப்புத் தீர்மானத்தின் தொடர்ச்சி

சிறப்புத் தீர்மானம்; மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் ஒன்றிய அரசினால் மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை குறைப்பு செய்வதற்கும், வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பணி நாட்களை குறைக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியத் தொகையினை விடுவிக்காமல் இருப்பதை கண்டித்து பெரும்பான்மையான மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

31-01-2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்டது.

673) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3 காமராஜ் சாலை டாக்டர் கலைஞர் பேருந்து நிலையம் டெர்மினல் பில்டிங் தரைதள நிர்வாக அறை வாடகைக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்ற தீர்மான எண்.479 நாள்.16.11.2022–ன்படி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு கீழ்காணுமாறு மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விட பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் கோரப்பட்டது.

வ. எண்.	அறை விபரம்	கடைகளின் விபரம்	பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏல வைப்புத்தொகை
1	நிர்வாக அலுவலகம் மெயின் டெர்மினல் பில்டிங் தரைதள கட்டிடம்	1. கடை எண். 85 (848 சதுர அடி) 2. கடை எண். 86 (1048 சதுர அடி)	கடை ஒன்றுக்கு ரூ.10.00 இலட்சம் வீதம்

பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் நாள். 19.09.2024ல் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள டெர்மினல் பில்டிங் தரைத்தள கட்டிடம் கடை எண்– 86க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்த ஆர்.ராமநாதன், காரைக்குடி என்பவருக்கு மாதவாடகை ரூ.50,123/–அடிப்படையில் திருப்பூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 413 நாள். 23/09/2024–ன் படி ஒப்புதல் பெற்று மேற்படி கடைக்கான உரிமம் வழங்கப்பட்டது.

தற்போது, மேற்படி கட்டிடத்தில் கடைகள் தனியாக பிரிக்கப்பட்டதை ஒன்றாக சேர்த்து பொது மக்கள் வந்து செல்ல வழிகள் அமைத்து புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதன் பின்னர், மேற்படி கடைகள் பொது ஏலம் கோரும்பட்சத்தில் அதிக வாடகைக்கு செல்லும் என்பதால் ஏற்கனவே குத்தகைதாரர் திரு.ஆர்.ராமநாதன், காரைக்குடி என்பவருக்கு பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் மூலம் மாத வாடகை ரூ.50,123/– அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை எண்.86ன் உரிமத்தினை இரத்து செய்தும், அன்னாரால் செலுத்தப்பட்ட வைப்புத் தெகைகளை திரும்ப வழங்கவும், கடைக்கான புணரமைப்பு பணிகள் மேற்கொண்டு கடைகள் எண். 85 மற்றும் 86–ஐ ஒன்றாக இணைத்து கடை எண். 85ஆக பொது ஏல/ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ.20.00 இலட்சமாக நிர்ணயித்து நடைமுறையில் உள்ள பொது ஏல/ஒப்பந்தப்புள்ளி நிபந்தணைகளின்படி, ஏற்கனவே தரைதளத்தில் 5 கவுண்டர்கள் கொண்ட ஃபுட் கோர்ட் முதல்தளத்தில் இரண்டு உணவகங்கள் குத்தகைக்கு உள்ளதால், உணவக கடைகள் தவிர்த்து, பிற கடைகளாக பயன்படுத்திக்கொள்ள ஒருங்கிணைக்கப்பட்ட கடை எண். 85ஐ வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விட பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் கோர மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– அனுமதிக்கலாம். (5929/2024/அ1/மை.அ)

தீர்மானம் : 28-03-2025 ம் தேதிய கூட்டத்தின் 872-ஆம் எண்ணிட்ட தீர்மானத்தில் உரிய முடிவுகள் எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

•••••••

பொருள் அட்டவணை :

766) திருப்பூர் மாநகராட்சியில் மாண்புமிகு மேயர் அவர்களின் அலுவலகப் பயன்பாட்டு வாகனம் இன்னோவா கிரிஸ்டா எண் TN 39 DK 0033-இல் காலமுறை பராமரிப்பு வேலைகள் செய்ய மேற்காண் வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருவாளர் " கோயமுத்தூர் ஆனைமலைஸ் ஏஜென்சிஸ் பிரைவேட் லிமிடெட் " திருப்பூர் நிறுவனத்தில் உத்தேச செலவினமாக ரூ.75,000/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இதனை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டவிதிகள் 2023-ன் அதிகாரம் VII, பகுதி உட்பிரிவு -249, அட்டவணை-II-ன் படி ஆணையர் அவர்களின் அதிகாரவரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று மேற்காண் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி மேற்காண் நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம். (இ5 / 0461 / 2025)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

767) திருப்பூர் மாநகராட்சியில் மாண்புமிகு துணைமேயர் அவர்களின் அலுவலகப் பயன்பாட்டு வாகனம் இன்னோவா கிரிஸ்டா எண் TN 39 CA 0006-இல் காலமுறை பராமரிப்பு வேலைகள் செய்ய மேற்காண் வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருவாளர் " கோயமுத்தூர் ஆனைமலைஸ் ஏஜென்சிஸ் பிரைவேட் லிமிடெட் " திருப்பூர் நிறுவனத்தில் உத்தேச செலவினமாக ரூ.25,000/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இதனை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டவிதிகள் 2023-ன் அதிகாரம் VII, பகுதி உட்பிரிவு -249, அட்டவணை-II-ன் படி ஆணையர் அவர்களின் அதிகாரவரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று மேற்காண் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி மேற்காண் நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம். (இ5 / 0839 / 2025)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

768) திருப்பூர் மாநகராட்சியில் பொறியியற் பிரிவு வாகனம் பொலேரோ ஈப்பு எண் TN 39 AU 0291 மண்டலம் -3 இல் சுகாதார அலுவலர் (பொ) அலுவலரின் அலுவலகப் பணிக்கான பயன்பாட்டில் உள்ளது. மேற்காண் வாகனத்தில் பழுது நீக்கும் வேலைகள் செய்ய மேற்காண் வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருவாளர் " ரமணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் " திருமுருகன் பூண்டி நிறுவனத்தில் உத்தேச செலவினமாக ரூ.**1,89,607/-**க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இச்செலவினத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்ட விதிகள் 2023-ன் அதிகாரம் VII. பகுதி உட்பிரிவு - 249, அட்டவணை -II -ன் படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று மேற்காண் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி

768-ன் தொடர்ச்சி

மேற்காண் நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம். (இ5 / 5328 / 2025)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

769) திருப்பூர் மாநகராட்சியில் தலைமைப் பொறியாளர் அவர்களின் அலுவலகப் பயன்பாட்டு வாகனம் ஸ்கார்ப்பியோ எண் TN 39 AW 2008-இல் காலமுறை பராமரிப்பு வேலைகள் செய்ய மேற்காண் வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருவாளர் " ரமணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் " திருமுருகன் பூண்டி நிறுவனத்தில் உத்தேச செலவினமாக ரூ.**1,84,817/-**க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இதனை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்ட விதிகள் 2023-ன் அதிகாரம் VII, பகுதி உட்பிரிவு - 249, அட்டவணை -II -ன் படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று மேற்காண் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி மேற்காண் நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம். (இ5 / 6143 / 2024)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

770) திருப்பூர் மாமன்றத்தின் மாண்புமிகு மேயர் அவர்களது 03-02-2024-ஆம் தேதிய ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில் திருப்பூர் மாநகரம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மண்டலம் எண்-3, குமரன் சாலையில் தற்போது கட்டி முடிக்கப்பட்டு தரை அடித்தளத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், தரை மற்றும் இரண்டு தளங்களில் கூட்டரங்குகள், கட்டிடத்தின் பின்புறம் நான்கு தளங்கள் கொண்ட வாகன நிறுத்துமிடம் ஆகியவை கொண்ட மாநாட்டு மையத்திற்கு (Convention Centre) உபயதாரர் ரங்கசாமி செட்டியார் என்னும் பெயரை சூட்டிட ஆவன செய்ய வேண்டி மாண்புமிகு மேயர் அவர்களின் சார்பாகவும் மண்டல குழுக்களின் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் (மாந6) 11-07-2022-ம் தேதிய 98-ஆம் எண்ணிட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான சாலைகள், கட்டிடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வழியாக அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு அனுப்பி உரிய அனுமதி பெற்ற பின்னரே, உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்மந்தப்பட்ட மாமன்றத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டுமென ஆணை வெளியிடப்பட்டு நடைமுறையில்

770-ன் தொடர்ச்சி

உள்ளது. இப்பொருள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு கடந்த 05-02-2024 ஆம் தேதிய கடிதத்தின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக அரசு முதன்மை செயலர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளதன் பேரில் தொடர் நடவடிக்கையாக 19-02-2025 தேதியிட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் குமரன் சாலையிலுள்ள புதிய மாநாட்டு மையத்திற்கு (**Convention Centre)** "**திருப்பூர் மாநகராட்சி ரங்கசாமி செட்டியார் மாநாட்டு அரங்கம்**" என பெயர் சூட்டுவதற்கான தீர்மானத்தினை திருப்பூர் மாநகராட்சி மாமன்றத்தின் முன் வைத்திட அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பொருள் தொடர்பாக மாமன்றத் தீர்மானம் இயற்றி அதனை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழியாக அரசுக்கு அனுப்பி வைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இம்மாநகராட்சியின் மண்டலம் எண்.-3 ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய மாநாட்டு மையத்திற்கு (Convention Centre) "**திருப்பூர் மாநகராட்சி ரங்கசாமி செட்டியார் மாநாட்டு அரங்கம்** " (Tiruppur Corporation Rangasamy Chettiyar Convention Centre) என்று புதிதாக பெயர் சூட்ட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம். **(இ3 / 637 / 2024)**

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

---

771) மிஷன் வாத்சல்யா திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட SOP (Standard Operationg Procedures)–ல் குறிப்பிட்டுள்ளவாறு, குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம் CHDK (Child Help Line Desk) அமைக்க மாத வாடகை கட்டணமின்றி இடம் ஒதுக்கீடு செய்துதரகோரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் அவர்களது 26/02/2025ம் தேதிய க.எண்.603. மா.கு.பா.அ/அ2/2023 எண்ணிட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கையின் பேரில், இம்மாநகராட்சியின் மண்டலம் எண்.03, வார்டு எண்.44 காமராஜ் சாலை டாக்டர். கலைஞர் பேருந்து நிலைய மெயின் டெர்மினல் பில்டிங் உட்புறத்தில், திருப்பூர் மாநகர காவல், X–Ray Baggage Scanner Machine என்ற அறைக்கு அருகில் 10' x 10' என்ற அளவில் உள்ள இடத்தினை கீழ்காணும் நிபந்தணைகளின்படி உதவி மையம் அமைத்துக்கொள்ள இலவசமாக மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதிபெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

நிபந்தணைகள் : –

1. அனுமதிக்கப்பட்டுள்ள 10' x 10' என்ற அளவைவிட கூடுதலான இடத்தை மாநகராட்சியின் அனுமதியின்றி பயன்படுத்தக்கூடாது.
2. அனுமதிக்கப்பட்ட இடம் மாநகராட்சிக்கு தேவைப்படும் நேர்வில், காலிசெய்து திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
3. உதவி மையம் CHDK (Child Help Line Desk) அமைக்க ஒதுக்கீடு செய்யப்படும் இடத்தினை தூய்மையாகவும், சுகாதாரமான முறையில் பராமரித்துக் கொள்ள வேண்டும்.
4. உதவி மையத்திற்ககு தேவைப்படும் மின்சார வசதிகள், தொலைத்தொடர்பு இணைப்பு வசதிகள், குடிநீர் வசதிகள் ஆகியவற்றை சொந்த செலவில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

771–ன் தொடர்ச்சி

5. மின் இணைப்பு மற்றும் இதர உபகரணங்களுக்கான பயனீட்டுக் கட்டணங்களை செலுத்திக்கொள்ள வேண்டும்.

அலுவலக குறிப்பு :–

மாமன்றம் அனுமதிக்கலாம். (அ1 /838/2025)

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

---

772) பொது மக்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் செல்லப் பிராணிகளை (Pet Animals) முறையாக மாநகராட்சியில் நாளிதழில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் பதிவு செய்து உரிமம் (License) பெற்று கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் அபராதம் ரூ.5000/- முதல் ரூ.50,000/- வரை அபராதம் விதிக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023-ன் படி, திருப்பூர் மாநகராட்சிக்கு என கீழ்கண்ட பட்டியல் தயார் செய்து இணைத்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

உரிமக் கட்டணம்

வ.எண்	செல்லப் பிராணிகள் விபரம்	உரிமத் தொகை (ஒன்றுக்கு)	குறிப்பு
1.	செல்லப் பிராணிகள் - (Dogs)	ரூ.200	ஒரு அனுமதிக்கு

உரிமம் வழங்குவதற்கான நிபந்தனைகள்

1) உரிமைத்தாரர், திடக்கழிவு மேலாண்மை விதிகள் - 2016-ல் தெரிவித்துள்ள வழிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும்.
2) செல்லப்பிராணிகள் அறையை போதுமான அளவு இயற்கை வெளிச்சம், காற்றோட்டம் இருக்குமாறு கட்டமைப்பு செய்ய வேண்டும்.
3) செல்லப் பிராணிகளுக்கு முறையாக தடுப்பூசி போடப்பட்டு, அதற்கான சான்றிதழ் பராமரிக்க வேண்டும்.
4) செல்லப் பிராணிகளின் கழிவுகளை தனியே ஒரு கொள்கலனில் (Container) சேகரித்து சுகாதார முறைப்படி ஒவ்வொரு நாளும் அப்புறப்படுத்த வேண்டும்.
5) எவ்வித் நோய்த் தொற்றும் ஏற்படாமல் கவனமாக கண்காணித்து வர வேண்டும். ஏதேனும் நோய் தொற்று அல்லது தொற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டால் உடன் மாநகர நலஅலுவலருக்கு விபரம் தெரிவிக்க வேண்டும்.
6) மேலும் சாதாரண காயங்கள் ஏற்பட்டால், அதன் அறை மற்றும் சுற்றுப் புறங்களை பராமரிக்க வேண்டும்.
7) அருகில் வசிப்பவர்களுக்கு ஆபத்து அல்லது தொல்லைகள் ஏதும் விளைவிக்க கூடாது.
8) வசிக்கும் அறை குளிப்பாட்டும் வசதி, தண்ணீர் வசதி, கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதி மற்றும் இதர சுகாதார வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
9) கழிவுகள், சிறுநீர், உணவு வெளியேற்றம் மற்றும் இதர கழிவுகள் வெளியேற்றங்களை முறையாக சுகாதாரமுறைப்படி அப்புறப்படுத்த வேண்டும்.

772-ன் தொடர்ச்சி

10) பொது மக்களுக்கு தொந்தரவு / எரிச்சல் / அசௌகரியம் ஏற்படுமாறு பொது இடங்கள் அல்லது தனியார் இடங்களில் கழிவேற்றம் செய்து கூடாது.

11) பொது இடங்களில் இருப்பிடம் (Shed/ Room) அமைக்கக் கூடாது.

12) பிராணிகள் வளர்க்கும் இடங்களை ஆணையர் மற்றும் ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகள் பகல் அல்லது இரவு நேரங்களில், இந்த இடங்கள் உபயோகத்தில் உள்ள போது ஆய்வு மேற்கொள்வதற்கு அணுகும் வசதி (Access) ஏற்படுத்தித் தர வேண்டும்.

13) முறையான உரிமம் இல்லாமலோ அல்லது வெளியில் சுற்றி திரிந்தாலோ அல்லது பொது இடங்களில் வாழ்விடங்கள் அல்லது அறைகள் அமைந்திருந்தாலோ அல்லது மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் மீறி இருந்தாலோ பிராணிகள் எவ்வித அறிவிப்புமின்றி (Seize) உடன் பிடித்து செல்லப்படும்.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம். (எச்.3 / 349 / 2025)

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

---

773) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-1, வேலம்பாளையம் கிராமம் க.ச.எண். 129 / A 2 மற்றும் 133 / 1 A 2- ல் 4.10 ¾ ஏக்கர் (அ) 16623.00 ச.மீ நிலப்பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு. R.சுப்ரமணியன் மற்றும் 3 நபர்கள், கதவு எண். 16, திரு.வி.க. நகர், 50 அடி சாலை 2வது குறுக்கு வீதி, காலேஜ் ரோடு, திருப்பூர் என்பவர் விண்ணப்பித்துள்ளார். உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர், திருப்பூர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி SWP / DTCP / Tiruppur / LPA / LAY OUT NO. 20 / 2024 என்ற எண்ணிலும் திட்ட அனுமதி 20/2024 என்ற எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெறப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவில் உள்ள சாலைகள் 4879.82 ச.மீ. பூங்காவிற்கு 1245.63 ச.மீ. பசுமைப் புல்வெளிக்கு 52.10 ச.மீ. மற்றும் பொது ஒதுக்கீடு 153.29 ச.மீ. இடம் திருப்பூர் மாநகராட்சிக்கு தான சாசன பத்திரம் எண.805 /2024 நாள் 23-02-2024- மூலம் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 09-12-2020-ன்படி மனைப்பிரிவு உரிமையாளர் மாநகராட்சிக்கு ஒப்படைவு செய்துள்ள சொத்துக்களை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பின்னேற்பு வழங்கலாம். (எப்.1 / 1079 / 2024 / ம.1)

தீர்மானம் : பின்னேற்பு வழங்கப்பட்டது.

---

774) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 04. வார்டு எண். **36, 37,** 38, 39, 42, 43, -க்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நீண்ட ஆண்டுகள் ஆகியுள்ளதாலும், குடிநீர் குழாயில் ஏற்படுகின்ற நீர் அழுத்தம் ஏற்றத்தாழ்வு காரணமாகவும், கனரக போக்குவரத்து காரணமாகவும் குடிநீர் குழாய்கள்

774-ன் தொடர்ச்சி

அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. மேற்காண் வார்டுகளில் குடிநீர் பற்றாக்குறைகளின் விபரம் பின்வருமாறு.

வார்டு எண்.	90mm Dia Kmtrs	110mm Dia Kmtrs	140mm Dia Kmtrs	160mm Dia Kmtrs	200mm Dia Kmtrs	மொத்தம் Kmtrs
38	26.725	3.750	-	3.250	-	33.725
39	31.250	2.850	-	2.755	-	36.855
42	20.149	3.500	1.225	2.350	1.700	29.024
43	18.700	2.250	.750	1.200	1.850	24.750
மொத்தம்	96.824	12.350	1.975	9.555	3.550	124.354

மேற்காண் 4 வார்டுகளில் உள்ள பகிர்மானக் குழாய்களின் நீளம் 124.35 கி.மீ. ஆகும். இவ்வார்டுகளில் 4 நீரேற்று நிலையங்களின் வாயிலாக 6 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மூலம் விநியோகிக்கப்படுகிறது. பெரிய ஆண்டிபாளையம் நீரேற்று நிலையத்திலிருந்து ONLINE மூலம் பகிர்மானத்தில் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மேலும் இம்மாநகரம் தொழில் நகரமாதலால் வாகனப் போக்குவரத்து நெரிசல் காரணமாகவும் மற்றும் கனரக போக்குவரத்து காரணமாகவும், மேலும், திட்டப் பணி நடைபெறுவதால் சாலைகளில் மண் அகழ்வுப் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதாலும், தகவல் தொடர்புத் துறை கேபிள் பதிப்பு காரணமாகவும், தட்ப வெப்ப நிலை மாறுபாட்டினால் குழாயின் தாங்கு திறன் மாறுபட்டு உடைப்பு மற்றும் நீர்க்கசிவுகள் ஏற்படுகிறது. இந்நீர்க்கசிவினால் நீரழுத்தம் குறைந்து சீரான முறையில் விநியோகமாவதில்லை. இதனால் பகிர்மானத்தில் குடிநீர் கசிவு ஏற்பட்டு அதிகளவில் விரயமாகிறது. மேலும், குடிநீர் பகிர்மானக் குழாய் பாதையில் ஒரு சில இடங்களை கழிவுநீர் கலந்து பொது சுகாதாரக்கேடு ஏற்படா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆதலால் இந்நீர்க்கசிவுகளையும் தடுப்பு நடவடிக்கைகளையும் உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் முறைப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எனவே 6 வார்டுகளுக்கு 03 மாத காலத்தில் நீரேற்று குழாய் பாதை மற்றும் பகிர்மானக் குழாய் பாதைகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்ட வகையில் மதிப்பீடு ரூ.8.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்காண் பணிகள் குடிநீர்ப் பணி அத்தியாவசிய அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளலாம். மேல்நடவடிக்கையாக அரசாணை நிலை எண். 158, நாள் 02-11-2022 ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணைகளின்படி நிர்வாக அனுமதி கோரி ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. குடிநீர்ப் பணி அத்தியாவசிய அவசரம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

775) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-1, வார்டு எண்.22-க்குட்பட்ட கருப்பராயன் கோவில் வீதி பகுதியிலுள்ள மழைநீர் வடிகாலில் வரும் மழைநீர் கொண்டு செல்ல பிரதான வடிகால் ஏதும் இல்லாத காரணத்தால் மழைக் காலங்களில் வரும் தண்ணீர் வடிகாலில் நிரம்பி சாலையில் தேங்குகிறது. எனவே வடிகாலில் வரும் தண்ணீர் அருகில் உள்ள சிறிய பாறைக்குழியில் தேங்கி சுகாதார கேடு ஏற்படுகிறது. தற்பொழுது அதிக அளவில் மழை பெய்ய துவங்கியதால் தண்ணீர் மட்டம் உயர்ந்து சாலைகள் மற்றும் வீடுகளிலும் நிரம்பி வெளியேறுவதில்லை. ஆதலால் பாறைக்குழியில் தண்ணீர் மட்டம் உயரும் பட்சத்தில் பிரத்தியேக குழாய் பதித்து அதன் மூலம் தண்ணீரை வெளியேற்றம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.80 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ஆகும்.

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மாமன்ற பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 427 / 2025/ ம.1)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

776) திருப்பூர் மாநகராட்சியில் 2016-2017ம் ஆண்டில் இருந்து 2020-2021ம் ஆண்டு வரை மேற்கொண்ட பணிகளின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட EMD 1%, FSD 1% மற்றும் ASD 5% தொகைகளை திரும்ப வழங்க கோரி கீழ்கண்ட ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி, ஒப்பந்ததாரர் பணி செய்து முடித்து 3 ஆண்டுகள் முதல் 6 ஆண்டுகள் மேல் ஆகிவிட்டதால் பிடித்தம் செய்யப்பட்ட பல்வேறு பணிகளுக்கான வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே கீழ்கண்ட வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

திருவாளர்கள்:

1.	Shree Shayee Associates	-	1197007.00

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதி வழங்கலாம். **(பி4/4850/2025)**

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

---

777) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -4, வார்டு எண்.53, பாரதி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் 45 குழந்தைகள் பயின்று வருகின்றனர். இதனால் போதிய இடவசதி இல்லாததால் மேற்கண்ட மையத்தை விரிவாக்கம் செய்ய ரோட்டரி கிளப் ஆப் பாரதி திருப்பூர் குழுமத்தினர் அனுமதி கோரியுள்ளனர். மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டதில் அங்கன்வாடி மையத்தை ஒட்டி கிழபுறம் 10” x 16” அடி அளவுக்கு இடம் உள்ளது. அவற்றில் கட்டிடம் கட்ட கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

777-ன் தொடர்ச்சி

நிபந்தனைகள்

1) கட்டப்படும் கட்டிடத்தின் ஸ்ரத்தன்மை மற்றும் வடிவமைப்பு மாநகராட்சி பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெற்றும், அறிவுரைப்படியும், முழு மேற்பார்வையின் கீழும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2) எதிர்காலத்தில் நன்கொடையாளர்கள் மேற்படி வகுப்பறைகள் கட்டிடம் தொடர்பாக எவ்வித உரிமையும் கோரக்கூடாது.
3) வகுப்பறைகள் கட்டுமானப் பணி நடைபெறும் காலத்தில் தேவையான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நன்கொடையாளர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செய்து கொள்ள வேண்டும். ஏதேனும் அசம்பாவிதம் சேதாரம் ஏற்பட்டால் அதற்கு தாங்களே பொறுப்பாவீர்கள். திருப்பூர் மாநகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்காது.
4) கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் மேற்படி வகுப்பறைகள் மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.
5) மேற்படி பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவிர அரசு மற்றும் ஆணையாளர் திருப்பூர் மாநகராட்சி அவர்களால் விதிக்கப்படும் புதிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அலுவலகக் குறிப்பு : -

1) மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 2480 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

778) வார்டு எண்.4-க்குட்பட்ட தோட்டத்துப்பாளையம் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாடற்ற பாறைக்குழியில் நீண்டகாலமாக தேங்கியுள்ள மழைநீரை அகற்றி மாநகராட்சி சுகாதாரப் பிரிவு மூலம் சேகரித்து பெறப்படும் திடக்கழிவு மேலாண்மை கழிவுகளை கொட்ட ஏதுவாக தயார் செய்ய ஏதுவாக மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட பாறைக்குழி களஆய்வு செய்யப்பட்டது. மேற்படி, தோட்டத்துப்பாளையம் பகுதியில் உள்ள பாறைக்குழியானது நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் மழைநீரால் நிரம்பி உள்ளது. பாறைக்குழியானது சுமார் 1.50 ஏக்கர் பரப்பளவு மற்றும் 95 அடி ஆழம் இருக்கும். எனவே பாறைக்குழியில் நிரம்பியுள்ள மழைநீரை நீர்மூழ்கி மோட்டார் மூலம் 595 மீட்டர் தொலைவில் நெருப்பெரிச்சல் பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகாலில் கொண்டு வெளியேற்றலாம். மின்மோட்டாரை இயக்க தேவையான மின்சார வசதி பாறைக்குழி அருகில் ஏதும் இல்லாததால் ஜெனரேட்டர் உதவியுடன் மேற்படி பணியை செய்யலாம்.

மேலும் பாறைக்குழியை சுற்றிலும் புதர் மண்டியுள்ளதால், மின்மோட்டார் மற்றும் கேபிள்களை பாறைக்குழியில் பொருத்தும் பணியை கிரேன் மூலம் செய்யலாம். மேற்படி பணிகளை செய்ய மதிப்பீடு ரூ.17,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 2023 பிரிவு 57 / 7-ன் படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தின்படி நிர்வாக

778-ன் தொடர்ச்சி

அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1 / 1784 / 2024 / ம.2)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

779) திருப்பூர் மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் மாற்றியமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்தின் கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் புதிதாக நான்கு இடங்களில் மின் தூக்கிகள் 4 (LIFT) பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. திருவாளர் Schindler India Pvt.Ltd., Chennai நிறுவனத்தாரால் மேற்காண் மின் தூக்கிகள் பொருத்தப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி ஓராண்டு இலவச பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 11-12-2023 அன்றோடு ஒப்பந்தம் (இலவச பராமரிப்பு) முடிவடைந்துவிட்டதால் மீண்டும் மேற்காண் மின்தூக்கிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மேற்காண் மின்தூக்கி இயந்திரத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருவாளர் Schindler India Pvt.Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் மாதத்திற்கு ரூ.49,953/- வீதம் ஓராண்டிற்கு ரூ.5,99,440/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காண் பணியின் மதிப்பீட்டிற்கு ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காண் பணிக்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

780) திருப்பூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்தின் கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் புதிதாக நான்கு இடங்களில் மின் தூக்கிகள் 4 (LIFT) பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. திருவாளர் Schindler India Pvt.Ltd., Chennai நிறுவனத்தாரால் மேற்காண் மின் தூக்கிகள் பொருத்தப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி ஓராண்டு இலவச பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 27-07--2024 அன்று ஒப்பந்தம் (இலவச பராமரிப்பு) முடிவடைவதால் மீண்டும் மேற்காண் மின்தூக்கிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மேற்காண் மின்தூக்கி இயந்திரத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருவாளர் Schindler India Pvt.Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் மாதத்திற்கு ரூ.49,953/- வீதம் ஓராண்டிற்கு ரூ.5,99,440/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காண் பணியின் மதிப்பீட்டிற்கு ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காண் பணிக்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

781) திருப்பூர் மாநகராட்சியில் மைய மற்றும் மண்டல அலுவலகங்கள், மற்றும் வரி வசூல் மையங்களில் பொது மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளும் ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை முறையில் செயல்படுத்தவும், மின் ஆளுமை சேவைகளுக்காக மாநகராட்சியின் மைய அலுவலகத்தில் சர்வர்கள், கணிணிகள், பிரிண்டர்கள், வலையமைப்பு கட்டமைப்புகள் மற்றும் பிற உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே மின்னாளுமை சேவை பணிகளுக்காக தேவைப்படும் கணிணிகள் மற்றும் உபகரணங்கள், மின் ஆளுமை உபகரணங்கள் மின்தடையின்றி இயங்க தேவைப்படும் யூபிஎஸ் கட்டமைப்புகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மாநகராட்சி பயன்பாட்டிற்கு தேவைப்படும் கணிணிகள் மற்றும் யூபிஎஸ்களை ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பெறப்பட்டுள்ள உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு பெறப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படைகளில் மதிப்பீடுகள் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திருவாளர்கள் Alan Info Services Private Limited, Tiruchirapalli நிறுவனத்தின் மூலம் பணிகள் 01-03-2024 முதல் நடைபெற்று வருகிறது.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.
1.	திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டலங்களில் உள்ள யூபிஎஸ்-களை ஓராண்டிற்கு இயக்குதல் மற்றும் பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்	**10.20** இலட்சம்
2.	திருப்பூர் மாநகராட்சி மைய, மண்டல அலுவலகங்கள் மற்றும் வரி வசூல் மையங்களில் பயன்பாட்டில் உள்ள கணிணிகள் பிரிண்டர்கள் மற்றும் இதர உபகரணங்களை ஓராண்டிற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல்	**23.20** இலட்சம்

மேற்படி இரண்டு பணிகளுக்கான பணி உத்திரவு காலம் 28-02-2025 உடன் முடிவடையும் நிலையில் உள்ளதால், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் தேவைப்படுவதாலும், ஒப்பந்தத்தில் மேற்படி பணி திருப்திகரமாக இருப்பின் மீண்டும் ஓராண்டு காலத்திற்கு அதே ஒப்பந்தத்தில் புதுப்பித்து பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளதன் பேரில் மேற்படி நிறுவனத்தாருக்கு 01-03-2025 முதல் 28-02-2026 வரை பணிகளை அதே ஒப்பந்தத்தில் அதே விலைவிகித்தில் பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகளை (01-03-2025 முதல் 28-02-2026 வரை) மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத்தை பொது நிதியிலில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர்ந்து பணியின் மேற்கொள்ள அங்கீகரிக்கலாம். (இ1 / 558 / 2024)

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

---

782) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், பொங்குபாளையம் கிராமம் காளம்பாளையம் புல எண். 206-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள பயன்பாடற்ற இரண்டு பாறைக்குழிகளை மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை கழிவுகளை கொட்ட ஏதுவாக சுத்தம் செய்தல் குறித்து.

பொங்குபாளையம் கிராமம் காளம்பாளையம் புல எண்.206-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள பயன்பாடற்ற பாறைக்குழியை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவால் சேகரிக்கப்படும் திடக்கழிவு மேலாண்மை கழிவுகளை கொட்ட ஏதுவாக தயார் செய்ய, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் அனுமதி வழங்கப்பட்டு உள்ளதையடுத்து, மாநகராட்சி மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட பாறைக்குழிகள் களஆய்வு செய்யப்பட்டது. மேற்படி பொங்குபாளையம் கிராமம் காளம்பாளையம் புல எண்.206-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள இரண்டு பாறைக்குழிகளில் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாததால் மழைநீர் தேங்கி, மிகவும் அசுத்தம் அடைந்து உள்ளது. இரண்டு பாறைக் குழிகளும் சேர்ந்து உத்தேசமாக சுமார் 1 ஏக்கர் பரப்பளவு மற்றும் ஒவ்வொரு பாறைக்குழியும் 100 அடி ஆழமும் உள்ளது.

எனவே பாறைக்குழியில் நிரம்பியுள்ள அசுத்தம் அடைந்த மழைநீரை 1000 மீட்டர் தொலைவில் உள்ள பொங்குபாளையம் கிராமத்திற்குட்பட்ட வறண்ட நிலப்பகுதியில் (தரிசு நிலம்) 12.5 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் 2 எண்ணிக்கை மூலம் வெளியேற்ற வேண்டியுள்ளது. மேற்கண்ட பாறைக்குழிகளில் பொருத்தும் மின் மோட்டாரை இயக்க, தேவையான மின்சார வசதி பாறைக்குழி அருகில் ஏதும் இல்லாததால் மின்ஜெனரேட்டர் உதவியுடன் மேற்படி பணியை செய்ய வேண்டியுள்ளது.மேலும், இரண்டு பாறைக்குழிகளை சுற்றிலும் புதர் மண்டியுள்ளதால் மின்மோட்டார் மற்றும் கேபிள்களை பாறைக்குழிகளில் பொருத்தும் பணியை கிரேன் மூலம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணிகளை செய்ய மதிப்பீடு ரூ-.16,25,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 2023 பிரிவு 57/7-ன் படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) பதிவு செய்யலாம். (இ1 / 427 / 2024)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

783) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், பொங்குபாளையம் கிராமம் காளம்பாளையம் புல எண். 206-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள பயன்பாடற்ற இரண்டு பாறைக்குழிகளை மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை கழிவுகளை கொட்ட ஏதுவாக பாதுகாப்பு தடுப்பு வேலி (**Steel Fencing)** மற்றும் காவலர் அறை அமைத்தல் குறித்து.

பொங்குபாளையம் கிராமம் காளம்பாளையம் புல எண்.206-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள பயன்பாடற்ற பாறைக்குழியை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவால் சேகரிக்கப்படும் திடக்கழிவு மேலாண்மை கழிவுகளை கொட்ட ஏதுவாக தயார் செய்ய, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை

783-ன் தொடர்ச்சி

ஆணையில் அனுமதி வழங்கப்பட்டு உள்ளதையடுத்து, மேற்படி பொங்குபாளையம் கிராமம் காளம்பாளையம் புல எண்.206-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள இரண்டு பாறைக்குழிகளில் நிரம்பியுள்ள அசுத்தம் அடைந்த மழைநீரை வெளியேற்றிய பின், அப்பாறைக்குழிகளில் மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை கழிவுகளை கொட்டப்பட்டு வருகிறது.

அப்பகுதி பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில், பயன்பாடற்ற பாறைக்குழிகளை சுற்றி உடனடியாக பாதுகாப்பு தடுப்பு வேலி (Steel Fencing) மற்றும் காவலர் அறை அமைத்து கண்காணிக்க மாண்புமிகு மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் கள ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பயன்பாடற்ற பாறைக்குழியை சுற்றி பாதுகாப்பு தடுப்புவேலி((Steel Fencing) மற்றும் காவலர் அறை அமைக்கவும், பாறைக்குழி அருகில் தேவையான மின்சார வசதி ஏதும் இல்லாததால் மின்ஜெனரேட்டர் உதவியுடன் மேற்படி பணியை செய்யவும் மதிப்பீடு ரூ.15,00,000/-க்கு மதிப்பீடு தெயார் செய்யப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 2023 பிரிவு 57/7-ன் படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 427 / 2024)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

784) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண் **1558/2015/ஜெ1** நாள் **: 15.06.2015**ல் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **1** முதல் **4** வரையுள்ள **60** வார்டு பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு ஏற்ப கொசுதடுப்பு பணிகளை மேற்கொள்ள தேவையான பணியாளர்களை பணியமர்த்தவும், மேற்படி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுவினால் பரவும் இதர நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண் **554/2017/வி8** நாள் **: 10.02.2021** ல் திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுத்திட குடிநீர் விநியோகிக்கப்படும் போது குடி தண்ணீரில் தகுந்த அளவு குளோரின் கலந்திருக்க வேண்டும். புகை மருந்து அடித்தல், டெங்கு கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை ஒவ்வொரு தெருவாகச் சென்று கண்டறிந்து அனைத்து வீடுகளில் உள்ள உற்பத்தி மூலங்களை அழிக்க தேவையான எண்ணிக்கையில் பணியாளர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண் **1352/அ4/2020** நாள் **: 27.10.2021**ல் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நாளுக்கு நாள் காய்ச்சல் கண்ட நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் மற்றும் தொடர் மழையின் காரணமாகவும், நீரினால் பரவும் நோய்கள் மற்றும் கொசுவினால் பரவும் நோய்களான டெங்கு, சிக்கன்குன்யா மற்றும் மலேரியா போன்ற நோய்களை தடுக்கும்

784-ன் தொடர்ச்சி

பொருட்டு **300** தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை **(DBC)** நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது**.**

மேலும் ஆணையர்**,** திருப்பூர் மாநகராட்சி அவர்களின் **24.12.2024**ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் இம்மாநகராட்சி மண்டலம் எண் **1** முதல் **4** வரையுள்ள **60** வார்டு பகுதிகளில் **300** குடும்பங்களுக்கு ஒரு பணியாளர் வீதம் தற்காலிகமாக நியமனம் செய்து ஆறு நாள் வட்ட சுழற்சி முறையில் கொசு தடுப்பு பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது**.** இம்மாநகராட்சியில் மேற்படி பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால்**,** தேவையான கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை **(DBC)** தற்காலிகமாக **(**மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்கள்**)** பணியமர்த்தி இம்மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு அதன் அடிப்படையில் **Hot Spot** ஆக கண்டறியப்பட்ட வார்டு பகுதிகளில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு **75** நபர்கள் வீதம்**,** மண்டலம் **1**ல் **75** நபர்கள்**,** மண்டலம் **2**ல் **75** நபர்கள்**,** மண்டலம் **3**ல் **75** நபர்கள் மற்றும் மண்டலம் **4**ல் **75** நபர்கள் ஆக மொத்தம் **300** நபர்களை **01.01.2025** முதல் **31.03.2025** வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள **26-12-2024** ஆம் தேதியில் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது**.**

எனவே தினசரி மண்டலம் ஒன்றுக்கு தலா **75** நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு மொத்தம் **300** நபர்களை தற்காலிகமாக இம்மாநகராட்சி பணிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தினக்கூலி நிர்ணயம் செய்து வெளியிப்பட்ட செயல்முறை உத்தரவு ந**.**க **5453/2019/உ3** நாள் **20.08.2019**ன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ஊதியம் ரூ**.355/-** ன் அடிப்படையில் சுகாதார அலுவலர் அவர்களின் குறிப்பில் கோரியுள்ளபடி **01.01.2025** முதல் **31.03.2025** வரையுள்ள மூன்று மாத காலங்களுக்கு **300** கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை **(DBC)** தற்காலிகமாக பணியமர்த்தவும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ**.** ரூ**.83,00,000/-**க்கு **(77 Days X 300 Person X Rs.355/-)** நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.**

அலுவலகக் குறிப்பு :

மேற்படி 35 பணிகளுக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், முறையே ஒவ்வொரு பணிக்கும் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மாமன்றம் அனுமதிக்கலாம். **(ம.எண். 458 / 2024/25 / S / Z3 / EE - TCMC)**

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

---

813) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4 க்குட்பட்ட வார்டு எண். 28,29,36,37 மற்றும் 38 ல் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்முழ்கி மின்மோட்டார் பம்புகள், ஏர்கம்பரசர்கள் மற்றும் திறந்தவெளி கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார் பம்புகள் மூலமாக குடிநீர் அல்லாத உபயோகங்களுக்கு நீர் இறைப்பு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது மேற்கண்ட விசை பம்புசெட்டுகள் ஓராண்டு காலம் பராமரிப்பு ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் கால நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் ஒப்பந்த நீட்டிப்பு காலமும் முடிவடைந்ததாலும் புதிய ஒப்பந்த புள்ளி கோர போதிய கால அவகாசம் தேவையுள்ளதாலும் (01.03.2025 முதல் 31.06.2025 வரை) நான்கு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து அதே ஒப்பந்தத்தில் அதே விலை விகிதத்தில் ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று 5 வார்டுகள் வாரியாக ஒருங்கிணைத்து பாரமரிப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.9.75/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டு செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

813-ன் தொடர்ச்சி

அலுவலகக் குறிப்பு:-

1) பணியின் அவசர அவசியம் கருதி மாநகர மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததை மாமன்றம் ஏற்கலாம்.

(. 590/2023-24/S/Z4/EE,TCMC)

_____

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

---

814) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4 க்குட்பட்ட வார்டு எண்.39,40,41,42 மற்றும் 43 ல் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்முழ்கி மின்மோட்டார் பம்புகள், ஏர்கம்பரசர்கள் மற்றும் திறந்தவெளி கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார் பம்புகள் மூலமாக குடிநீர் அல்லாத உபயோகங்களுக்கு நீர் இறைப்பு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது மேற்கண்ட விசை பம்புசெட்டுகள் ஓராண்டு காலம் பராமரிப்பு ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் கால நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் ஒப்பந்த நீட்டிப்பு காலமும் முடிவடைந்தாலும் புதிய ஒப்பந்த புள்ளி கோர போதிய கால அவகாசம் தேவையுள்ளதாலும் (01.03.2025 முதல் 31.06.2025 வரை) நான்கு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து அதே ஒப்பந்தத்தில் அதே விலை விகிதத்தில் ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று 5 வார்டுகள் வாரியாக ஒருங்கிணைத்து பாரமரிப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.9.92 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது, மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) பணியின் அவசர அவசியம் கருதி மாநகர மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததை மாமன்றம் ஏற்கலாம்.

(. 590/2023-24/S/Z4/EE,TCMC)

_____

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

---

815) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4 க்குட்பட்ட வார்டு எண். 52,53,54,55 மற்றும் 57-ல் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்முழ்கி மின்மோட்டார் பம்புகள், ஏர்கம்பரசர்கள் மற்றும் திறந்தவெளி கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார் பம்புகள் மூலமாக குடிநீர் அல்லாத உபயோகங்களுக்கு நீர் இறைப்பு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது மேற்கண்ட விசை பம்புசெட்டுகள் ஓராண்டு காலம் பராமரிப்பு ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் கால நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் ஒப்பந்த நீட்டிப்பு காலமும் முடிவடைந்ததாலும் புதிய ஒப்பந்தப்பு ளி கோர போதிய கால அவகாசம் தேவையுள்ளதாலும் (01.03.2025 முதல் 30.06.2025 வரை) நான்கு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து அதே ஒப்பந்தத்தில் அதே விலை விகித்தத்தில் ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று 5 வார்டுகள் வாரியாக ஒருங்கிணைத்து பாரமரிப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.9.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

815-ன் தொடர்ச்சி

அலுவலகக் குறிப்பு:-

1) பணியின் அவசர அவசியம் கருதி மாநகர மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததை மாமன்றம் ஏற்கலாம்.

(. 590/2023-24/S/Z4/EE,TCMC)

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

---

816) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -4, வார்டு எண்.28, 29 மற்றும் 36, 37 வாக்குச் சாவடிகளில் வசதி குறைபாடுகள் நிவர்த்தி செய்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.3.15/- இலட்சம் தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-ன்படி வ.எண்.57, பக்கம் எண்.51-ல் பத்தி எண்.07-ல் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி 25-03-2024 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 26-03-2024 அன்று மாலை 3.00 மணி வரை விலைப் புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.	ஒப்பந்தப்புள்ளி விகிதம்
1	கோல்டன் இன்ஜினியரிங் கார்ப்பரேசன்	**3,10,279.50**	மதிப்பீட்டு விலையை விட 0.29% குறைவு
2	ராமச்சந்திரா எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் ஸ்டோர்	**3,13,071.20**	மதிப்பீட்டு விலையை விட 0.61% அதிகம்
3	பவர்லைன் டிரேடிங் கோ.	**3,17,027.00**	மதிப்பீட்டு விலையை விட 1.88% அதிகம்

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். கோல்டன் இன்ஜினியரிங் கார்ப்பரேசன் அவர்களின் விலைப் புள்ளியை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம். (**இ**1 / 745 / 2024-25)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

817) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-4, வார்டு எண்.36-க்குட்பட்ட மாநகராட்சி பூங்காவில் உள்ள விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்து உள்ளதால் குழந்தைகள் விளையாடும் போது காயம் ஏற்படுகிறது. மரத்தின் வேர் காரணமாக சுற்றுச் சுவர் பழுதடைந்து உள்ளது மற்றும் பூங்காவில் உள்ள லைட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு வண்ணம் பூசுதல் ஆகிய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இதற்கான மதிப்பீடு ரூ. **9.95** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு அரசு ஆணை எண்.158, உட்பிரிவு 6(2B) -ன் படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான மாநகராட்சி ஆணையாளரிடம் பெறப்பட்ட நிர்வாக அனுமதியை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம். (இ1 / 902 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

818) திருப்பூர் மாநகராட்சி மண்டலம்-4, வார்டு எண்-57-க்குட்பட்ட கடந்த 03-11-2024 அன்று பெய்த கனமழை காரணமாக பழவஞ்சிபாளையம் காவல் நிலையம் அருகில் உள்ள குறவன் குட்டையில் குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் புகுந்து விட்டது. மேலும் அப்பகுதி பொது மக்கள் அனைவரையும் பழவஞ்சிபாளையம் சமுதாய நலக் கூடத்தில் தங்க வைக்கப்பட்டனர். மழைநீர் ஆனது தற்போது வரை காவல் நிலையம் அருகில் உள்ள குட்டை போல் தேங்கியுள்ளதால் பொது மக்களுக்கு நோய் தோற்று ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் தற்போது மழை காலமாக இருப்பதால் மீண்டும் மழைநீர் குடியிருப்பு பகுதிக்குள் மழைநீர் புகாமல் இருப்பதற்கு தாழ்வான பகுதியை GSB&WMM கொட்டி சமன் செய்வதற்கு ரூ.7,80,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் விதிகள் 2023, அதிகாரம் VII, பகுதி உட்பிரிவு 249, அட்டவணை -II -ன் படி பணி மேற்கொள்ள மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம். (இ1 / 4069 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

819) திருப்பூர் மண்டலம் எண்.4, வார்டு எண்.36-க்குட்பட்ட நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள சுற்றுச் சுவர் உயரம் குறைவாக உள்ளதால் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. எனவே சுற்றுச் சுவர் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.19.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசு ஆணை எண்.158, உட்பிரிவு 6 (1B)-ன் படி மாண்புமிகு மேயர் நிர்வாக அனுமதி பெறப்பட்டதை, மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 0390 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

820) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம்-1க்கு உட்பட்ட நீரேற்று மற்றும் நீருந்து நிலையங்களில் குளோரினேற்ற கருவிகள் மற்றும் Cylinder Gas மூலம் (Disinfection Treatment) குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

குளோரினேற்ற கருவிகள் மண்டலம்-1-ல் கீழ்கண்ட இடங்களில் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

அதன் விபரங்கள் பின்வருமாறு:-

1. வெங்கமேடு நீரேற்று நிலையம்
2. இந்திரா நகர் நீரேற்று நிலையம்
3. வேலம்பாளையம் நீரேற்று நிலையம்
4. ஈ.பி. காலனி நீரேற்று நிலையம்
5. தாய்முகாம்பிகை நகர் நீரேற்று நிலையம்
6. அவினாசிகவுண்டன் பாளையம் நீருந்து நிலையம்
7. பி.என்.ரோடு குமரன் பார்க் எதிரில் உள்ள நீரேற்று நிலையம்
8. பிஷப்பள்ளி அருகில் உள்ள நீரேற்று நிலையம் (WDS)

820-ன் தொடர்ச்சி

மேற்காண் இடங்களில் குளோரினேற்ற கருவிகள் பொருத்தப்பட்டு குளோரின் வாயு மூலம் 24 மணி நேரமும் குடிநீர் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. Chlorine cylinder-ல் இருந்து குளோரினேற்ற இணைப்பு செய்யப்பட்டு குடிநீர் சுத்திகரிப்பு பணிகள் நடைபெறுகிறது. அவ்வப்போது இந்த கருவிகளில் (Chlorine plant) அழுத்தம் மாறுபடும் சூழலில் அடைப்புகள், வாயுக் கசிவுகள் மற்றும் பழுதுகள் ஏற்படுகிறது.

Chlorine is dangerous and heavy gas. Protection safety measures needs to take care of public from accident. This type of treatment is 100% effective and efficient one. So, Annual Maintenance Contract necessary for uninterrupted water treatment. Operation and Maintenance should be handed over to private service provider with risk coverage on agreement basis.

மேற்காண் குளோரினேசன் கருவியினை பராமாரிப்பு செய்ய போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாத காரணத்தினாலும் மேற்படி காலமுறை பராமாரிப்பினை உரிய தொழில் நுட்ப பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ள வேண்டியுள்ளதால், இப்பராமரிப்பு பணிகள் தி/வா. ஸ்ரீவிநாயகா கன்ட்ரோல் டெக்னாலஜிஸ்., கோயமுத்துார் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், குடிநீரில் Gas Chlorination முறையை பின்பற்றினால்தான் முழுமையான அளவில் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலும் எனவும். இக்கருவியினை முறையாக பராமாரிக்கப்பட்டால் தான் சீரான முறையில் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொண்டு, நீரினால் பரவக்கூடிய நோய்கள் மற்றும் கொசுவினால் ஏற்படும் டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல்களை கட்டுப்படுத்தி பொது மக்களை தொற்றிலிருந்து பாதுகாக்க இயலும். இக்கருவியினை (AMC) ஆண்டு பராமரிப்பு மூலம் ஒப்படைத்து சீராக பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஆய்வுக் கூட்டத்தின் போது அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், நீர் பகுப்பாய்வாளர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, கோவை. அவர்கள் நீர் மாதிரி சேகரிப்பின் போது, இப்பராமரிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு ஆய்வின் போது தெரிவித்தார்கள்.

Chlorine plant breakdown- ஏற்பட்டால் வாயுக்கசிவினால், விபத்துகள் நேரிடாதவாறும், குளோரினேற்ற கருவிகள் சீராக பராமரிக்கப்பட வேண்டிய அவசியத்தின் காரணமாகவும், குளோரினேற்ற கருவிகளை தி/வா. ஸ்ரீவிநாயகா கன்ட்ரோல் டெக்னாலஜிஸ்., கோயமுத்துார் நிறுவனத்தினருக்கு ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் (AMC) ஒரு வருட காலத்திற்கு ஒப்படைப்பு செய்து பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது, இந்நிலையில், நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின் காலம் **06.12.2024**உடன் முடிவடைகிறது.

எனவே, புதிய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர கால தாமதமும், மேலும், திருத்திய மதிப்பீடு தயார் செய்தால் கூடுதல் செலவினமும் ஏற்படும் என்பதாலும், தற்போது பராமரித்து வரும் நிறுவனத்தினருக்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் **07.12.2024** முதல் **31.05.2025** வரை கூடுதலாக ஆறு மாதங்களுக்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.4.95 இலட்சத்திற்கு **"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249,**

820-ன் தொடர்ச்சி

அட்டவணை-2-ன்-படி" ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றம் பதிவு செய்யலாம். (**இ1 / 3897 /2023 /ம.1**))

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

821) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம்-01-ல் இரண்டாம் மற்றும் NTADCL குடிநீர் திட்டங்களின் மூலம் குடிநீர் பெறப்பட்டு, கீழ்க்கண்ட இடங்களில் உள்ள நீரேற்று மற்றும் நீருந்து நிலையங்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு

வ. எண்	இடம்		MLD	நாள் ஒன்றுக்கு	வருடத்திற்கு **(353)**	Tonner 1000 Kg	100 Kg
1	வேலம்பாளையம்	-	5	15.00	5295	6.00	0
2	வெங்கமேடு	-	3.5	10.50	3707	-	4000
3	இந்திரா நகர்	-	1.5	4.50	1589	-	2000
4	சாமிநாதபுரம்	-	2	6.00	2118	-	2000
5	அவிநாசி கவுண்டம்பாளையம்	-	1	3.00	1059	-	1000
6	தாய் மூகாம்பிகை நகர்	-	1	3.00	1059	-	1000
7	பிஷப் பள்ளி அருகில்	-	12	36.00	12708	13.00	-
8	பி.என்.ரோடு	-	1	3.00	1059	2.00	-
9	கூடுதலாக 4-வது குடிநீர் திட்டம்	-				4.00	1000

மேற்காண் நீரேற்று நிலையங்களில் NTADCL (WDS)-ல் இருந்து பெறப்பட்டு குடிநீர் பகிர்மானத்தில் விநியோகத்தின் போது Tail end –ல் போதிய அளவில் Residual குளோரின் இருப்பதில்லை என இணை இயக்குநர், பொது சுகாதாரத் துறையிலிருந்து ஆய்வின் போது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் மேற்காண் குடிநீர்த் திட்டங்களிலிருந்து பகிர்மானத்தில் விநியோகிக்கப்படும் குடிநீரினை டெங்கு தடுப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு Disinfection Super Chlorinated through Secondary Chlorination Treatment முறையில் மேற்கொள்ளுமாறு பொது சுகாதாரத்துறை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குடிநீரினை சுத்திகரிப்பு செய்ய chlorine gas மூலம் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. Bleaching powder மூலம் மேற்கொள்ளப்படும் முறையில் சுத்திகரிப்பு பணிகள் முழுமையாவதில்லை. மேலும் இச்சுத்திகரிப்பு முறையில் செலவினமும் அதிகரிக்கும். இம்முறையில் பணியாட்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதால் சுத்திகரிப்பு பணிகள் போதிய பணியாளர்கள் இன்றி சீராக மேற்கொள்ள இயலுவதில்லை.

இதுகுறித்து நகராட்சி நிர்வாக ஆணையர்., அவர்கள் ஆய்வுக்கூட்டத்தின் போது பிளிச்சீங் பவுடர் மூலம் சுத்திகரிப்பினை முற்றிலும் தவிர்க்குமாறும், Gas Chlorination மற்றும் Sodium Hypo Chlorite (Liquid Chlorine) மூலம் சுத்திகரிப்பு

பணிகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்கள். ஆதலால், மேற்காண் நிலையங்களில் உள்ள Chlorination plant- Liquid chlorine வாயு மூலம் குடிநீர் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது, ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு Chlorine gas Cylinder வாடகை அடிப்படையில் தனியார் மூலம் பெறப்படுகிறது. இதன் ஒப்பந்த காலம் **09.12.2024** உடன் முடிவடைவதால் நிர்வாக நலன் கருதியும், குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு பணியின் அத்தியாவசியம் கருதியும் தொடர்ந் கூடுதலாக ஆறு மாத காலத்திற்கு **10.12.2024** முதல் **31.05.2025** வரை ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.**4.95**இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023ன் அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2ன் படி, ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின், பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மாமன்றம் பதிவு செய்யலாம். **(இ2 / 1900 / 2023)**

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

822) திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் எண்–2ல் 7வது வார்டுக்குட்பட்ட அவிநாசி நகர் பகுதியில் இயங்கி கொண்டுள்ள போயம்பாளையம் - 2 ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையத்திற்கு **(ICDS Center)** மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.5,50,000.00க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்ட விதிகள் 2023ன் அதிகாரம் VII, பகுதி உட்பிரிவு - 249, அட்டவணை - II - AS For Maintenance Works நாள்: 02.04.2023ன்படி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதியும் மேலும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை எடுக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது- மேலும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

கல்விநிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/6684/2024/ம2)

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

---

823) திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாராபுரம் பிரதான சாலையில், மண்டலம் எண்-3, வார்டு எண்.58-க்குட்பட்ட K.செட்டிபாளையம் பகுதியில் அய்யம்பாளையம் பிரிவு சந்திப்பு முதல் T.P.N.கார்டன் சந்திப்பு வரை மின்விளக்குகள் இல்லாத காரணத்தால் அடிக்கடி சாலை விபத்துகள் நடைபெற்று உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த மாதத்தில் மட்டும் 4 நபர்கள் மேற்படி பகுதியில் சாலை விபத்தில் உயிரிழந்துள்ளனர். எனவே மேற்படி பகுதியில் மின்விளக்குகள் அமைத்துத் தருமாறு கடந்த 25-01-2025 அன்று நடைபெற்ற வார்டு சபா கூட்டத்தில் அப்பகுதி பொது மக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டதின் பேரில் மேற்படி பகுதியில் 8 எண்ணிக்கையில் மையத் தடுப்பு மின்கம்பங்களுடன் கூடிய மின்விளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ.7,45,000/-க்கு (18%

823-ன் தொடர்ச்சி

GST உட்பட) (ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2023, அதிகாரம் - VII. பகுதி உட்பிரிவு 248, அட்டவணை - II-ன் படி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம். (இ1 / 0511 / 2025 / ம.3)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

824) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-4, வார்டு எண்.29-க்குட்பட்ட சாதிக் பாட்சா வீதியில் ஆழ்துளை கிணறு சேதம் அடைந்துள்ளதால் தண்ணீர் வசதி இல்லாமல் பொது மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும் மற்றும் பொது மக்கள் நலன் கருதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதன் அடிப்படையில் மேற்கண்ட பகுதியில் ஆழ்துளை கிணறு சீரமைக்க மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் - VII. பகுதி உட்பிரிவு 248, அட்டவணை - II-ன் படி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம். (இ1 / 9623 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

825) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-4, வார்டு எண்.28-க்குட்பட்ட சத்யா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் சேதம் அடைந்துள்ளதால் கழிவுநீர் நீர் வீதிகளில் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. மற்றும் அங்கு குடியிருக்கும் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு விளைவிக்கிறது. எனவே மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் சீரமைக்க மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் - VII. பகுதி உட்பிரிவு 248, அட்டவணை - II-ன் படி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம். (இ1 / 9624 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

826) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-4, வார்டு எண்.29-க்குட்பட்ட ஸ்டெயின்ஸ் ரோடு, 2-வது வீதியில் மழைநீர் வடிகால் சேதம் அடைந்துள்ளதால் கழிவுநீர் நீர் வீதிகளில் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. மற்றும் அங்கு குடியிருக்கும் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு விளைவிக்கிறது. எனவே மாமன்ற உறுப்பினர்

826-ன் தொடர்ச்சி

அவர்களின் கோரிக்கையின் படியும் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் சீரமைக்க மதிப்பீடு ரூ.7.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் - VII. பகுதி உட்பிரிவு 248, அட்டவணை - II-ன் படி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம். (இ1 / 9625 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

827) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-4, வார்டு எண்.28-க்குட்பட்ட மாஸ்கோ நகர் குறுக்கு வீதியில் சிறுபாலம் சேதம் அடைந்துள்ளதால் கழிவுநீர் வீதிகளில் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. மற்றும் அங்கு குடியிருக்கும் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு விளைவிக்கிறது. எனவே மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் சீரமைக்க மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் - VII. பகுதி உட்பிரிவு 248, அட்டவணை - II-ன் படி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பதிவு செய்யலாம். (இ1 / 9626 / 2025 / ம.4)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

828) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 01–க்கு உட்பட்ட வார்டு எண்கள். 1, 9, 10, 11 மற்றும் 15–க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளைக்கிணறுகள் மற்றும் திறந்தவெளிக்கிணறுகளில் உள்ள மின்விசைப் பம்பு செட்டுகள் மூலம் குடிநீர் அல்லாத அத்தியாவசிய உபயோகத்திற்கு பொது உவர்நீர் குழாய்கள் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இக்கிணற்று நீர் விநியோகம் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும், தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும் விநியோகிக்கப்படுகிறது. மண்டலத்தில் வார்டு வாரியாக உள்ள மின்விசை பம்புசெட்டுகளின் விபரம் பின்வருமாறு :–

வ. எண்.	வார்டு எண்	மின்விசை பம்பு செட்டுகளின் எண்ணிக்கை
1	1	20
2	9	23
3	10	21
4	11	49
5	15	18
மொத்தம்		**131**

828-ன் தொடர்ச்சி

மேற்படி, வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 131 எண்கள் மின் விசைபம்புசெட்டுகள் பயன்பாட்டில் உள்ளது. இம்மின் விசை பம்புசெட்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திட மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை, இம்மின்விசை பம்புசெட்டுகள் தினசரி இயக்கி கிணற்று நீர் விநியோகிக்கப்பட்டு குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பகிர்மானத்தில் பொதுக் குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இம்மின்விசை பம்புசெட்டுகள், மின்இணைப்பு கிணற்று நீர் விநியோகக் குழாய்ப்பாதைகள், குழாய் உடைப்புகள், நீர்க்கசிவுகள், மின் இணைப்பு பழுதுகள் மற்றும் மின் இயக்கிகளில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்து சீராக இயங்கச் செய்ய வேண்டும்.

இம்மின்விசை பம்பு செட்டுகள் தடையின்றி இயங்க சீராக பராமரிப்பு செய்திடவும், பம்புசெட்டுகளின் இயக்கம், மின் பயனீட்டளவுகள் பதிவுகள் செய்திடவும், அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் நீர்க்கசிவுகளை உடனுக்குடன் சரிசெய்து சீரான முறையில் விநியோகித்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம். இப்பழுதுகளை குறித்த காலத்திற்குள் செய்து முடித்து தண்ணீர் பற்றாக்குறை பகிர்மானத்தில் ஏற்படா வண்ணம் மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடும் குறைபாடுகளை சீர் செய்யும் வகையிலும் மாநகராட்சி மீது பொதுமக்களிடம் நற்பெயர் ஏற்படும் வகையில் சேவையினை மேம்படுத்தும் வகையில் இம்மின்விசை பம்புசெட்டுகளை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு ஒப்படைத்து இயக்கி ஆண்டு பராமரிப்பு செய்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு செலவினம் தொகை ரூ.42.00 இலட்சத்திற்கு "தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி" ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

829) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 01-க்கு உட்பட்ட வார்டு எண்கள். 12, 13, 14, 24 மற்றும் 25-க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளைக்கிணறுகள் மற்றும் திறந்தவெளிக்கிணறுகளில் உள்ள மின்விசைப் பம்பு செட்டுகள் மூலம் குடிநீர் அல்லாத அத்தியாவசிய உபயோகத்திற்கு பொது உவர்நீர் குழாய்கள் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இக்கிணற்று நீர் விநியோகம் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும், தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும் விநியோகிக்கப்படுகிறது. மண்டலத்தில் வார்டு வாரியாக உள்ள மின்விசை பம்புசெட்டுகளின் விபரம் பின்வருமாறு :-

வ. எண்.	வார்டு எண்	மின்விசை பம்பு செட்டுகளின் எண்ணிக்கை
1	12	24
2	13	30
3	14	26
4	24	26
5	25	61
மொத்தம்		**167**

மேற்படி, வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 167 எண்கள் மின் விசைபம்புசெட்டுகள் பயன்பாட்டில் உள்ளது. இம்மின் விசை பம்புசெட்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திட மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை, இம்மின்விசை பம்புசெட்டுகள் தினசரி இயக்கி கிணற்று நீர் விநியோகிக்கப்பட்டு குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பகிர்மானத்தில் பொதுக் குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இம்மின்விசை பம்புசெட்டுகள், மின்இணைப்பு கிணற்று நீர் விநியோகக் குழாய்ப்பாதைகள்,

829-ன் தொடர்ச்சி

குழாய் உடைப்புகள், நீர்க்கசிவுகள், மின் இணைப்பு பழுதுகள் மற்றும் மின் இயக்கிகளில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்து சீராக இயங்கச் செய்ய வேண்டும்.

இம்மின்விசை பம்பு செட்டுகள் தடையின்றி இயங்க சீராக பராமரிப்பு செய்திடவும், பம்புசெட்டுகளின் இயக்கம், மின் பயனீட்டளவுகள் பதிவுகள் செய்திடவும், அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் நீர்க்கசிவுகளை உடனுக்குடன் சரிசெய்து சீரான முறையில் விநியோகித்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம். இப்பழுதுகளை குறித்த காலத்திற்குள் செய்து முடித்து தண்ணீர் பற்றாக்குறை பகிர்மானத்தில் ஏற்படா வண்ணம் மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடும் குறைபாடுகளை சீர் செய்யும் வகையிலும் மாநகராட்சி மீது பொதுமக்களிடம் நற்பெயர் ஏற்படும் வகையில் சேவையினை மேம்படுத்தும் வகையில் இம்மின்விசை பம்புசெட்டுகளை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு ஒப்படைத்து இயக்கி ஆண்டு பராமரிப்பு செய்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு செலவினம் தொகை ரூ.53.00 இலட்சத்திற்கு "தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி" ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

830) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 01-க்கு உட்பட்ட வார்டு எண்கள். 21, 22, 23, 26 மற்றும் 27-க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளைக்கிணறுகள் மற்றும் திறந்தவெளிக்கிணறுகளில் உள்ள மின்விசைப் பம்பு செட்டுகள் மூலம் குடிநீர் அல்லாத அத்தியாவசிய உபயோகத்திற்கு பொது உவர்நீர் குழாய்கள் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இக்கிணற்று நீர் விநியோகம் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும், தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும் விநியோகிக்கப்படுகிறது. மண்டலத்தில் வார்டு வாரியாக உள்ள மின்விசை பம்புசெட்டுகளின் விபரம் பின்வருமாறு :-

வ. எண்.	வார்டு எண்	மின்விசை பம்பு செட்டுகளின் எண்ணிக்கை
1	21	25
2	22	38
3	23	18
4	26	25
5	27	26
மொத்தம்		**132**

மேற்படி, வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 132 எண்கள் மின் விசைபம்புசெட்டுகள் பயன்பாட்டில் உள்ளது. இம்மின் விசை பம்புசெட்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திட மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை, இம்மின்விசை பம்புசெட்டுகள் தினசரி இயக்கி கிணற்று நீர் விநியோகிக்கப்பட்டு குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பகிர்மானத்தில் பொதுக் குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இம்மின்விசை பம்புசெட்டுகள், மின்இணைப்பு கிணற்று நீர் விநியோகக் குழாய்ப்பாதைகள், குழாய் உடைப்புகள், நீர்க்கசிவுகள், மின் இணைப்பு பழுதுகள் மற்றும் மின் இயக்கிகளில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்து சீராக இயங்கச் செய்ய வேண்டும்.

இம்மின்விசை பம்பு செட்டுகள் தடையின்றி இயங்க சீராக பராமரிப்பு செய்திடவும், பம்புசெட்டுகளின் இயக்கம், மின் பயனீட்டளவுகள் பதிவுகள் செய்திடவும், அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் நீர்க்கசிவுகளை உடனுக்குடன் சரிசெய்து சீரான முறையில் விநியோகித்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம். இப்பழுதுகளை குறித்த காலத்திற்குள்

830–ன் தொடர்ச்சி

செய்து முடித்து தண்ணீர் பற்றாக்குறை பகிர்மானத்தில் ஏற்படா வண்ணம் மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடும் குறைபாடுகளை சீர் செய்யும் வகையிலும் மாநகராட்சி மீது பொதுமக்களிடம் நற்பெயர் ஏற்படும் வகையில் சேவையினை மேம்படுத்தும் வகையில் இம்மின்விசை பம்புசெட்டுகளை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு ஒப்படைத்து இயக்கி ஆண்டு பராமரிப்பு செய்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு செலவினம் தொகை ரூ.43.00 இலட்சத்திற்கு "தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்–2023, அதிகாரம்–7, உட்பிரிவு–249, அட்டவணை–2–ன்–படி" ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

831) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் 01 வார்டு எண். 1, 9, 10, 11 & 15-க்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பிவிசி குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், பிவிசி குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதாலும், குழாயில் ஏற்படுகின்ற நீர் அழுத்தம் காரணமாகவும், குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் தாமதம் ஏற்படுவதுடன், பிரதான சாலைகள் மற்றும் வீதிகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளால் சாலையில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமத்தை ஏற்படுத்துவதுடன், சுகாதாரச் சீர்கேடுக்கும் வழிவகுக்கிறது. இந்நிலையை கருத்தில் கொண்டு, மேற்படி வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.**31.75** இலட்சம் மதிப்பீட்டில் திருவாளர்கள் வேலா அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு 04-12-2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின் காலம் எதிர்வரும் 31-03-2025 உடன் முடிவடைகிறது.

எனவே புதிய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர கால தாமதமும், மேலும் திருத்திய மதிப்பீடு தயார் செய்தால் கூடுதல் செலவினமும் ஏற்படும் என்பதாலும், தற்போது பராமரித்து வரும் நிறுவனத்தினருக்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் ஏப்ரல் 2025 முதல் மே-2025 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.96 இலட்சத்திற்கு **"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023,அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி"** ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் பதிவு செய்யலாம். (ம.எண். 450 / 2023-24 / N / CE. TCMC)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

832) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் 01 வார்டு எண்.12. 13, 14, 21. 22, 23 & 25-க்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பிவிசி குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், பிவிசி குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதாலும், குழாயில் ஏற்படுகின்ற நீர் அழுத்தம் காரணமாகவும், குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் தாமதம் ஏற்படுவதுடன், பிரதான சாலைகள் மற்றும் வீதிகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளால் சாலையில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமத்தை ஏற்படுத்துவதுடன், சுகாதாரச் சீர்கேடுக்கும் வழிவகுக்கிறது. இந்நிலையை கருத்தில் கொண்டு, மேற்படி வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.**42.10** இலட்சம் மதிப்பீட்டில் திருவாளர்கள் காதர் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு 04-12-2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின் காலம் எதிர்வரும் 30-12-2024 உடன் முடிவடைகிறது.

எனவே புதிய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர கால தாமதமும், மேலும் திருத்திய மதிப்பீடு தயார் செய்தால் கூடுதல் செலவினமும் ஏற்படும் என்பதாலும், தற்போது பராமரித்து வரும் நிறுவனத்தினருக்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் ஏப்ரல் 2025 முதல் மே-2025 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.60 இலட்சத்திற்கு **"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி"** ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மாமன்றம் பதிவு செய்யலாம்.

(**ம.எண்**. 448 / 2023-24 / N / CE. TCMC)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

833) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் 01 வார்டு எண். 24, 26 & 27-க்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பிவிசி குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், பிவிசி குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதாலும், குழாயில் ஏற்படுகின்ற நீர் அழுத்தம் காரணமாகவும், குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் தாமதம் ஏற்படுவதுடன், பிரதான சாலைகள் மற்றும் வீதிகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளால் சாலையில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமத்தை ஏற்படுத்துவதுடன், சுகாதாரச் சீர்கேடுக்கும் வழிவகுக்கிறது. இந்நிலையை கருத்தில் கொண்டு, மேற்படி வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.**18.50**இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திரு ஏ.ஆறுச்சாமி அவர்களுக்கு 04-12-2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின் காலம் எதிர்வரும் 31-03-2025 உடன் முடிவடைகிறது.

833-ன் தொடர்ச்சி

எனவே புதிய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர கால தாமதமும், மேலும் திருத்திய மதிப்பீடு தயார் செய்தால் கூடுதல் செலவினமும் ஏற்படும் என்பதாலும், தற்போது பராமரித்து வரும் நிறுவனத்தினருக்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் ஏப்ரல் 2025 முதல் மே-2025 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.80 இலட்சத்திற்கு **"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி"** ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் பதிவு செய்யலாம். (ம.எண். 449/2023-24 /N/CE/TCMC)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

834) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 01-க்கு உட்பட்ட 15 வார்டு பகுதிகளிலும் ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளில் உள்ள மின்விசைப் பம்பு செட்டுகள் மூலம் குடிநீர் அல்லாத அத்தியாவசிய உபயோகத்திற்கு பொது உவர்நீர் குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இக்கிணற்று நீர் விநியோகம் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும், தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும் விநியோகிக்கப்படுகிறது. மண்டலத்தில் வார்டு வாரியாக உள்ள மின்விசை பம்பு செட்டுகளின் விபரம் பின்வருமாறு.

வ.எண்.	வார்டு எண்.	மின்விசை பம்புசெட்டுகளின் எண்ணிக்கை
1	1	20
2	9	23
3	10	21
4	11	9
5	15	18
மொத்தம்		**131**
6	12	24
7	13	30
8	14	26
9	24	26
10	25	61
மொத்தம்		167
11	21	25
12	22	38
13	23	18
14	26	25
15	27	26
மொத்தம்		**132**
ஆக மொத்தம்		**430**

834-ன் தொடர்ச்சி

இம்மண்டலத்தில் (131 + 167 + 132=430)430 எண்கள் மின்விசை பம்பு செட்டுகள் பயன்பாட்டில் உள்ளது. இம்மின் விசை பம்புசெட்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திட மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை. இம்மின்விசை பம்புசெட்டுகள் தினசரி இயக்கி கிணற்று நீர் விநியோகிக்கப்பட்டு குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பகிர்மானத்தில் பொதுக்குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இம்மின்விசை பம்புசெட்டுகள், மின்இணைப்பு கிணற்று நீர் விநியோகக் குழாய்ப் பாதைகள், குழாய் உடைப்புகள், நீர்க்கசிவுகள், மின் இணைப்பு பழுதுகள் மற்றும் மின்இயக்கிகளில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்து சீராக இயங்கச் செய்ய வேண்டும்.

இம்மின்விசை பம்பு செட்டுகள் தடையின்றி இயங்க சீராக பராமரிப்பு செய்திடவும் பம்பு செட்டுகளின் இயக்கம், மின் பயனீட்டளவுகள் பதிவுகள் செய்திடவும், அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் நீர்க்கசிவுகளை உடனுக்குடன் சரிசெய்து சீரான முறையில் விநியோகித்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம். இப்பழுதுகளை குறித்த காலத்திற்குள் செய்து முடித்து தண்ணீர் பற்றாக்குறை பகிர்மானத்தில் ஏற்படா வண்ணம் மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடும் குறைபாடுகளை சீர் செய்யும் வகையிலும் மாநகராட்சி மீது பொது மக்களிடம் நற்பெயர் ஏற்படும் வகையில் சேவையினை மேம்படுத்தும் வகையில் இம்மின்விசை பம்புசெட்டுகளை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு ஒப்படைத்து இயக்கி ஆண்டு பராமரிப்பு செய்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் தலா 5 வார்டுகள் வாரியாக ஒருங்கிணைத்து 15வார்டுகளுக்கும் மின்விசைப்பம்பு செட்டுகளை இயக்கிப் பராமரிப்பு செய்ய கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகளின்படி ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின் காலம் 28-02-2025 உடன் முடிவடைகிறது.

வ. எண்.	வார்டு எண்கள்	மதிப்பீடு ரூ.	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்த நீட்டிப்பு காலம்	உத்தேச செலவினம் தொகை ரூ.
1	**1,9,10,11,15**	37.15	திருவாளர் குகன் காண்ட்ராக்டர்ஸ்	மூன்று மாதங்கள்	9.30
2	**12,13,14, 24,25**	47.35	திரு. ஏ. ஆறுச்சாமி	மூன்று மாதங்கள்	11.90
3	**21, 22, 23,26,27**	37.45	திரு. கே. லோகநாதன்	மூன்று மாதங்கள்	9.40
				மொத்தம்	**30.60**

எனவே புதிய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர கால தாமதமும், மேலும் திருத்திய மதிப்பீடு தயார் செய்தால் கூடுதல் செலவினமும் ஏற்படும் என்பதாலும், தற்போது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர்களுக்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் மார்ச் -2025 முதல் மே 2025 வரையிலான மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்ய மூன்று தொகுப்புகளுக்கும் ஆகும் உத்தேச செலவினம், தொகை ரூ.30.60 இலட்சத்திற்கு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி"** ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மாமன்றம் பதிவு செய்யலாம். (ம.எண்.578/2023-24 / வ / CE /TCMC)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

835) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் 01 வார்டு எண். 1, 9, 10, 11 & 12-க்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பிவிசி குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், பிவிசி குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதாலும், குழாயில் ஏற்படுகின்ற நீர் அழுத்தம் காரணமாகவும், குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் தாமதம் ஏற்படுவதுடன், பிரதான சாலைகள் மற்றும் வீதிகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளால் சாலையில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமத்தை ஏற்படுத்துவதுடன், சுகாதாரச் சீர்கேடுக்கும் வழிவகுக்கிறது. இந்நிலையை கருத்தில் கொண்டு, மேற்படி வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.32.00 இலட்சத்திற்கு **"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி"** ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

836) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் 01 வார்டு எண். 13, 14, 15, 21 & 22-க்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பிவிசி குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், பிவிசி குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதாலும், குழாயில் ஏற்படுகின்ற நீர் அழுத்தம் காரணமாகவும், குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் தாமதம் ஏற்படுவதுடன், பிரதான சாலைகள் மற்றும் வீதிகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளால் சாலையில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமத்தை ஏற்படுத்துவதுடன், சுகாதாரச் சீர்கேடுக்கும் வழிவகுக்கிறது. இந்நிலையை கருத்தில் கொண்டு, மேற்படி வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.32.00 இலட்சத்திற்கு **"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி"** ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1) மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

837) திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் 01 வார்டு எண். 23, 24, 25, 26 & 27-க்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பிவிசி குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், பிவிசி குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதாலும், குழாயில் ஏற்படுகின்ற நீர் அழுத்தம் காரணமாகவும், குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் தாமதம் ஏற்படுவதுடன், பிரதான சாலைகள்

837-ன் தொடர்ச்சி

மற்றும் வீதிகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளால் சாலையில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமத்தை ஏற்படுத்துவதுடன், சுகாதாரச் சீர்கேடுக்கும் வழிவகுக்கிறது. இந்நிலையை கருத்தில் கொண்டு, மேற்படி வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.**32.00** இலட்சத்திற்கு **"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள்-2023, அதிகாரம்-7, உட்பிரிவு-249, அட்டவணை-2-ன்-படி"** ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

838) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -4க்கு உட்பட்ட வார்டு எண்.36-ல் டவுன்ஹால் பகுதியில் புதிதாக கட்டப்பட்ட மாநாட்டு மையத்திற்கு புதை வடிகால் அமைத்து கழிவுநீர் வெளியேற்ற வேண்டியுள்ளது. இடம் ஆய்வு செய்யப்பட்டது. அதில் நடராஜ் தியேட்டர் சாலையில் நஞ்சப்பா பள்ளி செல்லும் சாலை சந்திப்பில் புதை வடிகால் Manhole ஏற்கனவே உள்ளது. ஆகவே மாநாட்டு மைய கட்டிடத்திலிருந்து மேற்கண்ட சந்திப்பில் உள்ள புதை வடிகால் Manhole -டன் இணைப்பு ஏற்படுத்தினால் மாநாட்டு மைய கழிவுநீர் வெளியேறும். அதன்படி மேற்கண்ட புதை வடிகால் பணி மேற்கொள்ள ரூ.10.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீடுத் தொகைக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் - VII. பகுதி உட்பிரிவு - 249, அட்டவணை-II-ன் படி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள 20-03-2025 மாநகராட்சி ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் பணி மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

839) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் - 4 - வார்டு எண்.42. க்குட்பட்ட கே.வி.ஆர். 1வது வீதியில் (கொடிக்கம்பம் சந்திப்பு முதல் கே.வி.ஆர்.நகர் மாநகராட்சி பள்ளி வரை) புதிய குடிநீர் திட்டப் பணிக்காக குழாய் பதித்தல் பணியின் போது சாலை தோண்டப்பட்டதால் சாலையானது குண்டும் குழியுமாக இருப்பதால், மழைக்காலங்களில் மழைநீர் சாலைகளில் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் வாகனங்களில் செல்வதற்கும், பள்ளி மாணவ மாணவிகள் பள்ளிக்கு செல்வதற்கும், மிகவும் சிரமமாக உள்ளது. மேற்கண்ட இடத்தை கள ஆய்வு செய்யப்பட்டது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட சாலையில் சேதமடைந்த பகுதிக்கு மட்டும் Patch Work சீரமைக்க ரூ.5.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்

839-ன் தொடர்ச்சி

செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பதிவு செய்யலாம் (**இ1/ 970 /2024 – 25 / ம – 4)**

_____

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

840) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் - 4 - முருகம்பாளையம் - வார்டு எண். 42க்குட்பட்ட வெங்கடாசலபுரம் 3வது வீதியில் பாதாள சாக்கடை சேதமடைந்த காரணத்தால் கழிவு நீர் சாலையில் சென்று போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது மேலும் பொதுமக்களுக்கு கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் பாதாள சாக்கடை சீரமைக்கும் பணி செய்ய ரூ.3.35 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பதிவு செய்யலாம் (**இ1/ 971 /2024 – 25 / ம – 4)**

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

841) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் - 4 - வார்டு எண்.42&43. க்குட்பட்ட ஜீவா நகர், ஏபிடி பிரதான சாலை, முத்துச்சாமி லே-அவுட், பூச்சக்காடு கோயில் வீதி ஆகிய பகுதிகளில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேலும் வருகின்ற காலம் கோடை காலமாக இருப்பதால் பொது மக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தண்ணீர் வசதி ஏதும் இல்லாததால் பொதுமக்களின் நலன் கருதி புதிதாக உவர் நீர் குழாய் ஏற்பாடு செய்ய. ரூ.6.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- **பதிவு செய்யலாம்** (**இ1/ 972 /2024 – 25 / ம – 4)**

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

842) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் - 4 ஜீவா நகர் ஓடை ஒட்டி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது. அதனால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது மேலும் அதில் வேறு யாரும் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் இடத்தை சுற்றி முழுவதும் புதிதாக கம்பி வேலி மற்றும் Gate அமைப்பதற்கு ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பதிவு செய்யலாம் (**இ1/ 973 /2024 – 25 / ம – 4)**

_____

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

843) திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் –2, வார்டு எண்.5 க்குட்பட்ட சமத்துவபுரம் பாரதி நகர் பகுதியில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் அனைவருக்கும் வீடு (PMAY–HFA) திட்டத்தின் கீழ் 384 பயனாளர்கள் பயன் பெறும் வகையில் அடுக்குமாடி குடியிருப்புகளை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் சார்பில் கட்டப்பட்டு தற்பொழுது பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. இக்குடியிருப்பு பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்க மேற்கண்ட துறையினர் மாநகராட்சிக்கு செலுத்திய தொகையில் ரூ.25.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம்–2022) விதிகள்–2023, பிரிவு–248, அட்டவணை இரண்டில் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஆணையர் அவர்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பதிவு செய்யலாம். (இ1/4055/2024/ம2)

––––––

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

844) திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் –2, வார்டு எண்.5 க்குட்பட்ட சமத்துவபுரம் பாரதி நகர் பகுதியில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் அனைவருக்கும் வீடு (PMAY–HFA) திட்டத்தின் கீழ் 384 பயனாளர்கள் பயன் பெறும் வகையில் அடுக்குமாடி குடியிருப்புகளை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் சார்பில் கட்டப்பட்டு தற்பொழுது பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. இக்குடியிருப்பு பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்க மேற்கண்ட துறையினர் மாநகராட்சிக்கு செலுத்திய தொகையில் ரூ.29.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம்–2022) விதிகள்–2023, பிரிவு–248, அட்டவணை இரண்டில் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஆணையர் அவர்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பதிவு செய்யலாம். (இ1/633/2025/ம2)

–––––––––

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

845) திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் –1, வார்டு எண்.1 க்குட்பட்ட செட்டிபாளையம் பகுதியில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் அனைவருக்கும் வீடு (PMAY–HFA) திட்டத்தின் கீழ் 240 பயனாளர்கள் பயன் பெறும் வகையில் அடுக்குமாடி குடியிருப்புகளை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் சார்பில் கட்டப்பட்டு தற்பொழுது பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. இக்குடியிருப்பு பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்க மேற்கண்ட துறையினர் மாநகராட்சிக்கு செலுத்திய தொகையில் ரூ.27.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம்–2022) விதிகள்–2023, பிரிவு–248,அட்டவணை இரண்டில் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஆணையர் அவர்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பதிவு செய்யலாம். (இ1/2802/2024/ம1)

–––––––

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

846) திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்.2, வார்டு எண்.20க்குட்பட்ட S.V. காலனி பகுதியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இப் பள்ளியில் தரைத்தளத்தில் உள்ள 5 வகுப்பறை கட்டிடங்கள் மிகவும் சேதமடைந்துள்ளது எனவும், மாணவர்களின் பாதுகாப்பு கருதி தற்பொழுது அருகில் உள்ள வாடகை கட்டிடத்தில் வகுப்புகளை நடத்தி வருவதாகவும் மேற்கண்ட பள்ளியின் தலைமை ஆசிரியரால் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கோவை தொழில்நுட்ப கல்லூரி தொழில்நுட்ப வல்லுநர்களால் வகுப்பறை கட்டிடங்களை ஆய்வு செய்து அவர்களது அறிக்கையில் கட்டிடம் உறுதித்தன்மையை இழந்து பாதுகாப்பற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வகுப்பறைகள் கட்டப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. இப்பள்ளி வளாகத்தில் உள்ள பழுதடைந்த 5 வகுப்பறை கட்டிடங்களை இடித்து விட்டு மாற்றாக புதிதாக 4 வகுப்பறை கட்டிடங்களை தங்களது சொந்த நிதியில் முழுமையாக கட்டிதர தி/வா.Prathyusha Power Gen Private Limited, எண்.40(1), S.V.காலனி, திருப்பூர் என்ற நிறுவனத்தினர் விருப்பம் தெரிவித்ததுள்ளதின் பேரில் அனுமதி வழங்க கீழ்காணும் நிபந்தனைகளை வகுக்கலாம்.

நிபந்தனைகள்:

1. உரிய வரைபடங்கள் மற்றும் வடிவமைப்பு (Design and Drawings) அனுமதி பெற்ற கட்டிட வடிவமைப்பாளரிடம் (Structural Engineer) பெற்று மாநகராட்சியின் தலைமை பொறியாளரின் ஒப்புதலின் பேரில் பணிகள் துவக்கபட வேண்டும்.
2. மாநகராட்சியின் முழு மேற்பார்வையின் கீழ் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
3. உரிய தரத்திலான கட்டுமான பொருட்களையே பயன்படுத்துதல் வேண்டும்.
4. பள்ளியில் இதர வகுப்புகள் நடைபெற்று வருவதினால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்.
5. எதிர்காலத்தில் நன்கொடையாளர்கள் மேற்படி கட்டிடத்திற்கு எந்தவித உரிமையும் கோர முடியாது.
6. பாதுகாப்பு குறைபாடுகளினால் ஏதேனும் அசம்பாவிதம் மற்றும் சேதாரம் ஏற்பட்டால் நன்கொடையாளரே முழு பொறுப்பு எனவும், இதற்கு மாநகராட்சி எந்தவகையிலும் பொறுப்பாகாது.
7. பணிகள் முழுமையாக முடித்து பயன்பாட்டு நிலையில் வகுப்பறைகளை மாநகராட்சிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
8. மேற்காணும் நிபந்தனைகள் தவிர்த்து அரசு மற்றும் ஆணையர் திருப்பூர் மாநகராட்சி அவர்களால் விதிக்கப்படும் புதிய நிபந்தனைகளுக்கும் கட்டுபடுதல் வேண்டும்.
9. இடிக்கப்படும் கட்டிடத்தில் இருந்து பெறப்படும் கம்பி, கதவுகள், ஜன்னல் மற்றும் மின் சாதன பொருட்களை மாநகராட்சிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம், மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) அனுமதி வழங்கலாம்.
2) பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி திறனை கருத்தில் கொண்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.

(இ1/56082/2024/ம2)

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

---

847) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3-ல் **15** வார்டுகளில் ஆழ்குழாய் / திறந்த வெளி கிணறுகளில் பம்புசெட் பொருத்தி குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு கிணற்று நீர் குழாய் பாதை பகிர்மானம் மூலம் விநியோகிக்கப்படுகிறது**.** இக்கிணற்று நீர் விநியோகம் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும்**,** தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும் விநியோகிக்கப்படுகிறது**.** மேலும் **15** வார்டுகளில் உள்ள குடிநீர் நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் மூன்றாவது திட்டக் குடிநீர் நீரேற்றம் செய்து மக்களுக்கு குடிநீர் விநியோகம் தங்கு தடையின்றி கொடுக்கப்பட்டு வருகிறது**.** மண்டலத்தில் வார்டு வாரியாக உள்ள மின்விசை பம்புசெட்டுகளின் விபரம் பின்வருமாறு**.**

வரிசை எண்	வார்டு எண்.	மின்விசை பம்புசெட்டுகளின் எண்ணிக்கை	இணைப்பு
I	34	33	Annexure - I
	35	17	
	51	23	
	58	23	
	மொத்தம்	96	
II	33	15	Annexure – II
	59	26	
	60	39	
	மொத்தம்	80	
III	44	40	Annexure – III
	45	41	
	மொத்தம்	81	
IV	46	34	Annexure – IV
	47	43	
	48	35	
	மொத்தம்	112	
V	49	32	Annexure – V
	50	38	
	56	29	
	மொத்தம்	99	

மேற்காண் மண்டலத்தில் (96 + 80 + 81 + 112 + 99= 468) 468 எண்கள் மின் விசைபம்பு செட்டுகள் பயன்பாட்டில் உள்ளது.

இம்மின்விசை பம்பு செட்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திட மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை. இம்மின்விசை பம்புசெட்டுகள் தினசரி இயக்கி கிணற்று நீர் குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பொதுக் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் மூன்றாவது திட்டக் குடிநீர் நிலமட்டத் தொட்டியில் இருந்து நீரேற்றம் செய்து மேற்கண்ட வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம்மின்விசை பம்பு செட்டுகள், மின் இணைப்பு கிணற்று நீர் விநியோகக் குழாய்ப் பாதைகள், குழாய் உடைப்புகள், நீர்க்கசிவுகள், மின்இணைப்பு பழுதுகள் மற்றும் மின்இயக்கிகளில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்து சீராக இயக்க ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது குறுகிய காலத்தில் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததால், நிர்வாக நலன் கருதி தற்பொழுது மேற்கண்ட பணியினை ஏற்கனவே பணி செய்த ஒப்பந்ததாரரையே, அதே விலை விகிதத்தில், கூடுதலாக 4 நான்கு மாத காலத்திற்கு (01-03-2025 முதல் 30-06-2025 வரை) பணியினை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.. விபரம் பின்வருமாறு.

847-ன் தொடர்ச்சி

வரிசை எண்	வார்டு எண்கள்.	மின்விசை பம்புசெட்டுகளின் எண்ணிக்கை	மதிப்பீடு ரூ. இலட்சத்தில்
I	34,35,51, 58	96	9.10
II	33, 59, 60	80	7.60
III	44, 45	81	7.70
IV	46,47,48	112	10.60
V	49,50,56	99	9.40
	மொத்தம்	368	44.40

மேற்காண் பணியினை ஐந்து பணிகளாக முறையே ரூ. I – 9.10, II-7.60, III-7.70, IV-10.60, V-9.40 இலட்சத்திற்கு மதிப்பீடுகள். மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.

2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரரையே வைத்து நான்கு மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்..

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

---

848) திருப்பூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.50 பெரிய தோட்டம் 3–வது வீதி பகுதியில் பொது மக்களுக்கு தினந்தோறும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் (RO Water) வழங்கப்பட்டு வருகிறது. மேலும் RO Water பிளாண்ட்டில் உள்ள மின்சாதன பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் அவ்வப்போது பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேலும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே பழுதடைந்துள்ள RO Water பிளாண்ட் மற்றும் அதன் உதிரி பாகங்களை அகற்றிவிட்டு புதிதாக மின்சாதன பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி பொது மக்களுக்கு சீரான சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ரூ.1.22 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57 / 7 –ன் கீழ் பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள 20–02–2025 மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் பணி மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பதிவு செய்யலாம். **(இ1 / 0803 / 2025 / ம.3)**

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

849) திருப்பூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.50 பெரிய தோட்டம் 5–வது வீதி பகுதியில் பொது மக்களுக்கு தினந்தோறும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் (RO Water) வழங்கப்பட்டு வருகிறது. மேலும் RO Water பிளாண்ட்டில் உள்ள மின்சாதன பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் அவ்வப்போது பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேலும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே பழுதடைந்துள்ள RO Water பிளாண்ட் மற்றும் அதன் உதிரி பாகங்களை அகற்றிவிட்டு புதிதாக மின்சாதன பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி பொது மக்களுக்கு சீரான

849-ன் தொடர்ச்சி

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ரூ.1.29 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57 / 7 -ன் கீழ் பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள 20-02-2025 மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் பணி மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

பதிவு செய்யலாம். **(இ1 / 0804 / 2025 / ம.3)**

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

850) திருப்பூர் மாநகராட்சி மண்டலம்-01, வார்டு எண்.21-க்குட்பட்ட பி.என்.ரோடு 2-வது குறுக்கு வீதி பகுதியில் உள்ள சிறுபாலம் முற்றிலும் சேதமடைந்த காரணத்தால் மழை காலங்களில் மழைநீர் வெளியேறி சாலையில் தேங்குவதால் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் பொது மக்கள் போக்குவரத்திற்கும் வாகனங்கள் சென்று வரவும் இடையூறாக உள்ளது. மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் மூலம் மேற்கண்ட பகுதியில் சேதமடைந்த சிறுபாலத்தினை அகற்றி புதிதாக சிறுபாலம் அமைத்து மழைநீரை வெளியேற்ற மதிப்பீடு தயார் செய்ய அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரை ஏற்று பொது மக்களின் நலனையும், சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டு மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் அமைக்க ரூ.4.00 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மாமன்றப் பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மாமன்றம் பதிவு செய்யலாம்

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

851) திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் -1, வார்டு எண்.1 க்குட்பட்ட செட்டிபாளையம் பகுதியில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் அனைவருக்கும் வீடு (PMAY-HFA) திட்டத்தின் கீழ் 240 பயனாளர்கள் பயன் பெறும் வகையில் அடுக்குமாடி குடியிருப்புகளை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் சார்பில் கட்டப்பட்டு தற்பொழுது பயன் பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. இக்குடியிருப்பு பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்க மேற்கண்ட துறையினர் மாநகராட்சிக்கு செலுத்திய தொகையில் ரூ.48.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம்-2022) விதிகள்-2023, பிரிவு-248, அட்டவணை இரண்டில் மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

852) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-3, வார்டு எண்-35-க்குட்பட்ட குமரன் வணிக வளாகத்தில் உள்ள வரி வசூல் மையத்தின் மேற்கூரை பூச்சு சேதமடைந்து கீழே விழுந்துள்ளது. மேலும் வளாகத்தில் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் உள்ள Sun shade வளாகத்தில் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் விநியோக குழாய்கள் சேதமடைந்துள்ளதாலும், மின்சார வசதிகள் பழுதடைந்துள்ளதால் இரவு நேரங்களில் வாகனங்கள் மற்றும் அருகில் உள்ள அம்மா உணவகத்தில் திருட்டுகள் நடைபெறுவதால் அவ்வணிக வளாகம் முழுவதும் மின்சார வசதிகளும், LED லைட் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.26.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் - VII பகுதி உட்பிரிவு - 249 அட்டவணை - II-ன் படி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அனுமதி வழங்கலாம். **(இ1 / 000592 / 2025)**

தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

---

853) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-01-ல் வார்டு எண்.25-க்குட்பட்ட மாமன்ற உறுப்பினர் அவர்கள், தனது கடிதத்தில் ரங்கநாதபுரம் பகுதியில் ஐந்து முக்கிய பிரதான வீதிகளும், இதில் 500-க்கும் மேற்பட்ட குடும்பங்களும் வசித்து வருவதாகவும், இப்பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணறு மூலம் பெறப்படும் விநியோகமானது போதுமானதாக இல்லாததாகவும் மற்றும் அதிகபட்சமான பொது உவர்நீர் குழாய்களுக்கு இணைப்பு உள்ளதால் சீராக தண்ணீர் வழங்க முடிவதில்லை எனவும், கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் செய்து தருமாறு மாண்புமிகு மேயர் அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இக்கடிதத்தை பரிசீலித்த மாண்புமிகு மேயர் அவர்கள் கடித மேற்குறிப்பில் மதிப்பீடு தயார் செய்ய தெரிவித்துள்ளார்கள். மேற்படி மாண்மிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுரையின் படியும், மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்றும் பொது மக்களுக்கு சீரான தண்ணீர் வழங்கும் வகையிலும், ரங்கநாதபுரம் பகுதியில் புதியதாக ஆழ்துளைக் கிணறு மற்றும் மின்மோட்டார் அறை அமைத்து தண்ணீர் வசதிகள் செய்தல் ஆகிய பணிக்கு மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் -7, உட்பிரிவு - 249 அட்டவணை -2-ன் படிபொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1/ 468 / 2025 / ம.2)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

854) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.02-ல் வார்டு எண்.30 மற்றும் 31-க்குட்பட்ட ராமமூர்த்தி நகர் மற்றும் அப்பாச்சி நகர் 5-வது வீதி பகுதிகளில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள் மற்றும் ராமு காலனி பகுதியில் மின்மோட்டார் அறை பழுதடைந்து உள்ளதாலும் பொது மக்களுக்கு சீரான முறையில் தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டும் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தின் பெயரில் நடவடிக்கை எடுக்கும் வகையிலும் மேற்கண்ட பகுதியில் புதிதாக மின் மோட்டார் மற்றும் பழுதடைந்துள்ள மின்மோட்டார் அறையை சீரமைக்க ரூ.3.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1/ 517 / 2025 / ம.2)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

855) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-02-ல் வார்டு எண்.19-க்குட்பட்ட ரங்கநாதபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பழுதடைந்துள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் குடியிருப்புகளுக்குள் புகுந்து விடுகிறது. மேலும் கழிவுநீர் சாலைகளில் தேங்கி நிற்கிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சிரமப்படுகின்றனர். மேலும் இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தை சரி செய்து தருமாறு கடிதம் கொடுத்துள்ளார். எனவே பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டும், மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கும் வகையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தை சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ள ரூ.5.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1/ 692 / 2025 / ம.2)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

856) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-02-ல் வார்டு எண்.04-க்குட்பட்ட தோட்டத்துப்பாளையம் லட்சுமி நகர் கிழக்கு பகுதியில் வசிக்கும் பொது மக்கள் குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பெரிதும் சிரமப்படுவதால், அத்தியாவசிய தேவையான உவர்நீரை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார். எனவே பொது மக்களின் நலனை கொண்டும் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தின் பெயரில் நடவடிக்கை எடுக்கும் வகையிலும், மேற்கண்ட பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றுக்கு PVC குழாய்கள் பதித்து தண்ணீர் வசதி செய்ய ரூ.5.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்

856-ன் தொடர்ச்சி

செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 1025 / 2025 / ம.2)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

857) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-02-ல் வார்டு எண்.16-க்குட்பட்ட ஸ்ரீநகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பழுதடைந்துள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் குடியிருப்புகளுக்குள் புகுந்து விடுகிறது. மேலும் கழிவுநீர் சாலைகளில் தேங்கி நிற்கிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சிரமப்படுகின்றனர். எனவே பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தை சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ள ரூ.3.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/ 1159 / 2025 / ம.2)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

858) திருப்பூர் மாநகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான வீட்டுவரி தண்ணீர் வரி கட்டணங்கள் விரைவுபடுத்தும் பணிகள் மற்றும் மாநகராட்சியில் 1 முதல் 60 வார்டு பகுதிகளிலும் நான்கு மண்டல உதவி வருவாய் ஆய்வாளர்கள் நேரில் சென்று வரி வசூல் செய்ய 4 எண்ணிக்கை வாகனங்கள் தேவைப்படுகிறது. வருவாய் பிரிவில் ஏற்கனவே 02-2024-ல் மொபைல் கலெக்ஷன் பணிக்காக 4 வாகனங்கள் நாள் வாடகை அடிப்படையில் (தற்காலிகமாக) அமர்த்திக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டது. மேற்காண் பணிக்கு உள்ளூர் வாடகை ஓட்டிகளிடம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு.

வ. எண்.	நிறுவனங்கள் விபரம்	நாள் வாடகை ரூ.	எரிபொருள் 1 கி.மீ. ரூ.
1	திருப்பூர் மாவட்ட சுற்றுலா ஓட்டுநர்கள் சங்கம் பதிவு எண். SRG / Tiruppur – 160 – 2020)	2800/-	10/-
2	லக்ஷனா டிராவல்ஸ், திருப்பூர்	3200/-	12/-
3	ராஜா டிராவல்ஸ், திருப்பூர்	3100/-	13/-
4	நலன் டிராவல்ஸ், திருப்பூர்	3300/-	13/-

மேற்காண் விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் திருப்பூர் மாவட்ட சுற்றுலா ஓட்டுநர்கள் சங்கம், திருப்பூர் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஒரு நாள் வாடகை ரூ.2800/- மற்றும் 1 கி.மீட்டருக்கு எரிபொருள் செலவினம் ரூ.10/- விகிதம் உள்ளூர் விலை நிலவரத்திற்கு உகந்தாற்போல் உள்ளதாலும், ஏற்கனவே - 02-2204 இல் வழங்கப்பட்ட அதே வாடகை அடிப்படைக்கு

858-ன் தொடர்ச்சி

மிகாமல் உள்ளதாலும், மேற்காண் விலைப்புள்ளியை ஏற்று, 4 வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினத்திற்கும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்ட விதிகள் 2023-ன் அதிகாரம் VII. பகுதி உட்பிரிவு 249 அட்டவணை- II -ன் படி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி மேற்காண் நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் பதிவு செய்யலாம். **(அ1 / 1771 / 2024)**

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

859) திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் 01 – வார்டு எண்.24–க்கு உட்பட்ட சாத்விகா நகர் மற்றும் லட்சுமி தியேட்டர் பிரதான சாலை பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாததால் கழிவுநீர் வெளியேற வழியின்றி குடியிருப்பு பகுதிக்குள் தேங்கி நிற்கிறது. இப்பகுதியில் மழைக்காலங்களில் குடியிருப்புகளுக்குள் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக அமைவதுடன் சுகாதார சீர்கேடும் ஏற்படுகிறது. எனவே, புதியதாக மழைநீர் வடிகால் அமைத்து தரக்கேட்டு இவ்வார்டின் மாமன்ற உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு. மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், மாண்புமிகு. மேயர் அவர்கள் நேரடி ஆய்வின்போது உடனடியாக மதிப்பீடு தயார் செய்ய தெரிவித்தார்கள். மேற்படி, மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்றும், பொதுமக்களின் நலனையும், சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டு மேற்படி, பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.9.80இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023ன் அதிகாரம்–7, உட்பிரிவு–249, அட்டவணை–2ன் படி, பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 000665 / 2025/ ம.1)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

860) திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் 01 – வார்டு எண்.13–க்கு உட்பட்ட நடராஜா லே–அவுட் 4வது வீதி பகுதியில் 60 மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளது. இப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் தேங்கும் கழிவுநீரை வெளியேற்ற உரிய பிரதான வடிகால் இல்லாமல் உள்ளது. மேலும், இப்பகுதியில் பிரதான வடிகால் அமைத்தால் தனியார் நிலத்தின் வழியாகத்தான் கொண்டு செல்ல வேண்டிய சூழல் உள்ளது. இதற்கு தனியார் நில உரிமைதாரர் பல வருடங்களாக ஒப்புதல் அளிக்காமலும், சமரசம் ஏற்படாமலும் இருப்பதால், இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கழிவுநீர் தேக்கத்தால் மிகுந்த அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். இதற்கு மாற்று ஏற்பாடு செய்து தருமாறு இவ்வார்டின் மாமன்ற உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு. மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மேற்படி, மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படி, மேற்படி, பகுதியில் கழிவுநீரை வெளியேற்றும் வகையில், புதியதாக கழிவுநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து மற்றும் கழிவுநீர் இறைக்கும் மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.17.20இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023ன் அதிகாரம்–7, உட்பிரிவு–249, அட்டவணை–2ன் படி, பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின்

860–ன் தொடர்ச்சி

அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 000666 / 2025/ ம.1)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

861) திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் எண்–01–க்குட்பட்ட 15 வார்டுகளுக்கான நிர்வாக பணிகள் அனுப்பர்பாளையத்தில் அமைந்துள்ள மாநகராட்சி 1வது மண்டல அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தில் உதவி ஆணையர், மண்டல தலைவர் அலுவலகங்கள், பொதுப்பிரிவு, பொதுசுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் வரிவசூல் மையம் ஆகியவை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் இவ்வலுவலகத்தில் செயல்பட்டு வரும் வரிவசூல் மையத்தில் போதிய கணினி இருக்கை வசதிகள் மற்றும் காசாளர் இருக்கை இல்லாததால் வசூல் பணிகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதுடன், பணியாளர்களுக்கு பணி மேற்கொள்வதில் அசௌகரியம் ஏற்படுகிறது. மேலும் வரி செலுத்த வரும் பொதுமக்களுக்கும் போதிய அமரும் வசதிகள் இல்லாமலும் உள்ளது. அத்துடன், இவ்வலுவலகத்தில் செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு அலுவல் வசதிக்காக போதிய அறைகள் இல்லாமல் உள்ளதால், மேற்படி அலுவலர்களுக்கு உரிய அறைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, மேற்படி அலுவலகத்தில் உள்ள வரிவசூல் மையத்தில் மேம்படுத்தல் பணிகள் மேற்கொள்ளவும், இவ்வலுவலகத்தில் முதல் தளத்தில் வடபுறம் உள்ள அறையினை சிறு சிறு அறைகளாக (பார்ட்டீசியன்) பிரிக்கும் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் சாய்வுதளம் அமைப்பதற்கும் மதிப்பீடு ரூ.5.90 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023ன் அதிகாரம்–VII, உட்பிரிவு–249, அட்டவணை–2ன் படி, பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 000667 / 2025/ ம.1)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

862) திருப்பூர் மாநகராட்சி–மண்டலம்– 01– வார்டு எண்.10–க்கு உட்பட்ட ஆத்துப்பாளையம் திருவள்ளுவர் நகர் பகுதியில் மாநகராட்சி சமுதாயக் கழிப்பிடம் அமைந்துள்ளது. இக்கழிப்பிடத்தில் போதிய தண்ணீர் வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் இல்லாமல் இருப்பதால் இதனை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர இயலாத நிலையில் உள்ளது. மேலும், இப்பகுதியின் மாமன்ற உறுப்பினர் அவர்கள் சமுதாய கழிப்பிடத்திற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தி பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு மாண்புமிகு. மேயர் மற்றும் ஆணையர் அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். மேற்படி, மாமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு மதிப்பீடு தயார் செய்ய தெரிவிக்கப்பட்டதன்படி, இக்கழிப்பிடத்தில் கழிப்பிட மராமத்து பணிகள், மின்சார வசதிகள் உள்ளிட்ட கூடுதல் மேம்படுத்தும் பணிகள் மற்றும் புதியதாக ஆழ்துளைக்கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.7.20 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023ன் அதிகாரம்–VII, உட்பிரிவு–249, அட்டவணை–2ன் படி, பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 000668 / 2025/ ம.1)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

863) திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் – 01– வார்டு எண்.13–க்கு உட்பட்ட அனுப்பர்பாளையம் புதூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி அவிநாசி பிரதான சாலையில் அமைந்துள்ள முக்கியமான பள்ளியாவதுடன், அனுப்பர்பாளையம் புதூர் பகுதியில் பழமைவாய்ந்த பள்ளியாகவும் உள்ள இப்பள்ளியில் 400–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் தற்போது தமிழ்நாடு அரசு பள்ளி மேம்பாட்டு மானியம், நாடாளுமன்ற உறுப்பினர் நிதி, சட்டமன்ற உறுப்பினர் நிதி, நமக்கு நாமே திட்டம் மற்றும் மாநகராட்சி பொது நிதி ஆகியவற்றின் கீழ் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும், இப்பள்ளியில் மாணவர் சேர்க்கை அதிகரித்து வருவதாலும், மாணவர்களுக்கு கூடுதல் அடிப்படை வசதிகளை பள்ளி மாணவர்களின் நலன் கருதி ஏற்படுத்தி தருமாறு இவ்வார்டின் மாமன்ற உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு. மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மேற்படி, மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படியும், பள்ளி வளர்ச்சி மற்றும் மாணவர்களின் நலன் கருதி மேற்படி பள்ளியில் மாடிப்படிக்கட்டு அமைத்தல், மின்சார வசதிகள் ஏற்படுத்துதல், சுவருக்கு வர்ணம் தீட்டுதல் மற்றும் மாணவர்கள் கூடும் மைதானத்தில் அலங்காரக் கற்கள் பதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.17.00 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023ன் அதிகாரம்–VII, உட்பிரிவு–249, அட்டவணை–2ன் படி, கல்வி நிதியிலிருந்து பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1 / 000669 / 2025/ ம.1)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

864) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 01 - வார்டு எண்.-23-க்கு உட்பட்ட ஆஷர் நகர் அலமேலு தொழில் வளாகத்தின் பின்புறம் ஓடை அமைந்துள்ளது. வார்டு எண்.24-க்கு உட்பட்ட சாமுண்டிபுரம், செல்லம்மாள் காலனி மற்றும் இபி காலனி பகுதிகள் மற்றும் வார்டு எண்.23-க்கு உட்பட்ட பாரதிதாசன் நகர், தியாகி பழனிச்சாமி நகர் மற்றும் ஆஷர் நகர் ஆகிய பகுதிகளில் இருந்து வெளிவரும் மழைநீர் மற்றும் கழிவுநீர் இவ்வோடை வழியாகத் தான் அவிநாசி ரோடு காந்தி நகர் பகுதியில் உள்ள ஓடைக்கு சென்றடைகிறது. மேற்படி ஓடையில் அதிகளவில் செடிகள் மற்றும் பிளாஸ்டிக் குப்பைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனால் பருவமழைக் காலத்தில் உற்பத்தியாகும் மழைநீர் சீராக செல்லாமல், அடைப்பு ஏற்பட்டு மேற்படி 23-வது வார்டுக்குட்பட்ட பாரதிதாசன் நகர் மற்றும் நாராயணசாமி நகர் பகுதிகளில் வீடுகளுக்கு மழைநீர் புகும் அபாய சூழல் உள்ளது. ஆகவே மேற்படி பகுதியில் உள்ள ஓடையை தூர் வாரும் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் விதிகள் 2023-ன் அதிகாரம் - 7, உட்பிரிவு - 249 அட்டவணை-2-ன் படி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

865) திருப்பூர் மாநகராட்சி மண்டலம்-01, வார்டு எண்.27-க்குட்பட்ட பாலமுருகன் நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சேதமடைந்த காரணத்தால் மழை காலங்களில் மழைநீர் வெளியேறி சாலையில் தேங்குவதால் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் பொது மக்கள் போக்குவரத்திற்கும் வாகனங்கள் சென்று வரவும் இடையூறாக உள்ளது. மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் மூலம் மேற்கண்ட பகுதியில் சேதமடைந்த மழைநீர் வடிகாலினை மறுசீரமைப்பு செய்து மழைநீரை வெளியேற்ற மதிப்பீடு தயார் செய்ய அறிவுறுத்தியுள்ளார். எனவே பொது மக்களின் நலனையும், சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டு மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.16.90 இலட்சத்திற்கு (ரூபாய் பதினாறு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மாமன்றப் பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம்

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

866) திருப்பூர் மாநகராட்சி மண்டலம்-01, வார்டு எண்.27-க்குட்பட்ட பிரியா பள்ளி வீதி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் முற்றிலும் சேதமடைந்த காரணத்தால் மழை காலங்களில் மழைநீர் வெளியேறி சாலையில் தேங்குவதால் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் பொது மக்கள் போக்குவரத்திற்கும் வாகனங்கள் சென்று வரவும் இடையூறாக உள்ளது. மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் மூலம் மேற்கண்ட பகுதியில் சேதமடைந்த மழைநீர் வடிகாலினை அகற்றி புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து மழைநீரை வெளியேற்ற மதிப்பீடு தயார் செய்ய அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.27.80 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தேழு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மாமன்றப் பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம்

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

867) திருப்பூர் மாநகராட்சி மண்டலம்-01, வார்டு எண்.27-க்குட்பட்ட எம்.என்.எஸ் நகர் மற்றும் சரண் தியேட்டர் ரோடு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் முற்றிலும் சேதமடைந்த காரணத்தால் மழை காலங்களில் மழைநீர் வெளியேறி சாலையில் தேங்குவதால் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் பொது மக்கள் போக்குவரத்திற்கும் வாகனங்கள் சென்று வரவும் இடையூறாக உள்ளது. மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் மூலம் மேற்கண்ட பகுதியில் சேதமடைந்த மழைநீர் வடிகாலினை அகற்றி புதிதாக மழைநீர் வடிகால்

867-ன் தொடர்ச்சி

மற்றும் சிறுபாலம் அமைத்து மழைநீரை வெளியேற்ற மதிப்பீடு தயார் செய்ய அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரை ஏற்று பொது மக்களின் நலனையும், சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டு மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.21.60 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தொன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மாமன்றப் பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மாமன்றம் பதிவு செய்யலாம்

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

868) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-02-ல் வார்டு எண்.17-க்குட்பட்ட சின்னபொம்மநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் குடியிருப்புகளுக்குள் புகுந்து விடுகிறது. மேலும் கழிவுநீர் சாலைகளில் தேங்கி நிற்கிறது. இதனால் அப்பகுதி பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டும் மற்றும் இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கும் வகையில், கீழ்நிலைத் தொட்டி, மோட்டார் மற்றும் மழைநீர் வடிகால் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ள ரூ.30.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) பதிவு செய்யலாம். (இ1/ 1158 / 2025 / ம.2)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

869) தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுயசான்றளிப்பு வரையறுக்கப்படாத குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைசாளர இணைய முகப்பில் (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து அரசாணை (ப) எண். 72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி1) துறை நாள். 05.02.2025ன் படி அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண். ந.க. எண். 31917/2019/டிபி2 நாள். 13.02.2025ன் படி அரசாணை முறைப்படுத்த நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணைகள் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் செயல்படுத்தும் போது அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு இணையாக உள்ளதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திருப்பூர் மாநகராட்சியில் 05.02.2025 முதல் கீழ்க்கண்ட திருத்திய கட்டண விகிதங்களை வசூல் செய்திட அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

869-ன் தொடர்ச்சி

வ. எண்	இனம்	குடியிருப்பு உபயோக கட்டிடம்
		அரசாணை எண். 72 நாள் 05.02.2025ன் படி புதிதாக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.
1	கூர்ந்தாய்வுக் கட்டணம்	500
2	காட்சிப் பலகை (Display Board)	1500
3	கட்டிட உரிமையாணைக் கட்டணம்	4200
4	உட்கட்டமைப்பு மற்றும் வசதி கட்டணம் (I & A)	2 தளத்துக்கு மேல் (அ) 325 ச.மீ மேல்
		2850
5	உட்கட்டமைப்பு மற்றும் வசதி கட்டணம் (I & A) 50% திரும்ப பெறக்கூடியது	3 சமையல் அறைக்கு மேல் (அ) 750 ச.மீ மேல்
		1425
6	வளர்ச்சி கட்டணம் (உள்ளூர் திட்டகுழுமம்)	130
7	தொழிலாளர் நல நிதிக் கட்டணம்	2320
8	கட்டிட முடிவுச் சான்று	3 சமையல் அறைக்கு மேல் (அ) 750 ச.மீ மேல்
		110

வ. எண்	இனம்	குடியிருப்பு அல்லாத உபயோக கட்டிடம் (10.00 ச.மீ.) அரசாணை எண்.72, நாள் 05-02-20225-ன்படி புதிதாக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.		
		(1.25% குறையாமல்)	(1.50% குறையாமல்)	(2.0% குறையாமல்)
1	கூர்ந்தாய்வுக் கட்டணம்	500	500	500
2	காட்சிப் பலகை (Display Board)	1500	1500	1500
3	கட்டிட உரிமையாணைக் கட்டணம்	6840	9160	13910
4	உட்கட்டமைப்பு மற்றும் வசதி கட்டணம் (I & A)	2850	2850	2850
5	உட்கட்டமைப்பு மற்றும் வசதி கட்டணம் (I & A) 50% திரும்ப பெறக்கூடியது	1425	1425	1425
6	வளர்ச்சி கட்டணம் (உள்ளூர் திட்ட குழுமம்)	260	260	260
7	தொழிலாளர் நல நிதிக் கட்டணம்	1930	1930	1930
8	கட்டிட முடிவுச் சான்று	110	110	110

வசூலிக்கப்பட வேண்டிய பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகை இணைப்பு ஒன்றிற்கு

வ, எண்	கட்டுமான பரப்பளவு	கட்டட உபயோகம் (ரூபாயில்)	
		குடியிருப்பு கட்டுமானம்	குடியிருப்பு அல்லாத கட்டுமானம்
1	3500 சதுர அடிக்கு கீழ்	10,000	20,000
2	3501 – 10,000 சதுர அடி	15,000	30,000
3	10,001 சதுர அடிக்கு மேல்	25,000	50,000

குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு அரசாணை எண். 72 நாள் 05.02.2025ன் படி புதிதாக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை 1.25%-த்திற்கு குறையாமல் மாமன்றம் முடிவு செய்யலாம். அரசாணை எண்.72 நாள் 05.02.2025ன் படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு:- 1) பதிவு செய்யலாம்.
2) அனுமதி வழங்கலாம். (F1 / 004376 / 2024)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

---

870) திருப்பூர் மாநகராட்சியின் கீழ்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு மூன்று ஆண்டு குத்தகை அடிப்படையில் பொது ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் மூலமாக 2025–28ம் ஆண்டுகளுக்கு குத்தகைக்குவிட கடந்த 21.03.2025 அன்று பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் கோரப்பட்டது, இதற்கு முன்னர் பலமுறை ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் நடத்தப்பட்டது. பெறப்பட்ட அந்தந்த குத்தகை இனங்களுக்கான உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்விகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

வ. எண்	உரிமை இனம்	அழைப் புகள்	2024–25 ஆண்டு குத்தகை தொகை	அரசு மதிப்பு (கூடுதல் 5%)	ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர்/ ஒப்பந்தப்புள்ளி நாள்	ஒப்பந்தப் புள்ளி தொகை
1	வேலம்பாளையம் அரசு மருத்துவமனை அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	7	1,59,863	1,67,856	திரு.K.நடராஜன் 07/03/2025	1,60,000
2	புதிய பேருந்து நிலையம் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம்	7	9,04,050	9,49,253	திரு.K.நடராஜன் 07/03/2025	8,25,000
3	காமராஜ் சாலை டாக்டர். கலைஞர் மத்திய பேருந்து நிலையம் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம்	7	26,76,668	28,10,501	திரு. V.K. செந்தில்நாதன் 07/02/2025	18,10,000
4	சின்னான் நகர் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	7	1,52,696	1,60,331	திரு. G. கோகுல கிருஷ்ணன் 14/03/2025	1,61,000
5	S.V காலனி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	7	90,405	94,925	–	–
6	வேலம்பாளையம் AVP ரோடு கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	7	1,69,344	1,77,811	–	–

அலுவலக குறிப்பு –

1. அட்டவணை வ.எண்.1ல் காணும் வேலம்பாளையம் அரசு மருத்துவமனை அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.K.நடராஜன், கோயம்புத்தூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ஆண்டுக்கு ரூ.1,60,000/– அளித்துள்ளார். இத்தொகை 2024–25ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.1,59,863/–ஐ விட உயர்வாகவும், அரசு மதிப்பு ரூ.1,67,856/–ஐ விட குறைவாகவும் உள்ளது. மேலும், இக்குத்தகை இனத்திற்கு 18.12.2024 முதல் 21.03.2025 வரை ஏழுமுறை வரவழைக்கப்பட்ட பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலங்களில் வேறு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி / ஏலத் தொகை பெறப்படாததால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்க, இதனை ஏற்று ஆண்டு குத்தகை தொகை ரூ.1,60,000/– அடிப்படையில் திரு.K.நடராஜன், கோயம்புத்தூர் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.
2. அட்டவணை வ.எண்.2ல் காணும் புதிய பேருந்து நிலையம் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.K.நடராஜன், கோயம்புத்தூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ஆண்டுக்கு ரூ.8,25,000/– அளித்துள்ளார். இத்தொகை 2024–25ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.9,04,050/– மற்றும் அரசு மதிப்பு ரூ.9,49,253/–ஐ விட குறைவாக உள்ளது. மேலும், இக்குத்தகை இனத்திற்கு 18.12.2024 முதல் 21.03.2025 வரை ஏழுமுறை வரவழைக்கப்பட்ட பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலங்களில் வேறு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி / ஏலத் தொகை பெறப்படாததால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்க ஆண்டு குத்தகை தொகை ரூ.8,25,000/– அடிப்படையில் திரு.K.நடராஜன், கோயம்புத்தூர் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

870–ன் தொடர்ச்சி

3. அட்டவணை வ.எண்.3ல் காணும் காமராஜ் சாலை டாக்டர்.கலைஞர் மத்திய பேருந்து நிலையம் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.V.K.செந்தில்நாதன், திருப்பூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ஆண்டுக்கு ரூ.18,10,000/– அளித்துள்ளார். இத்தொகை 2024–25ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.26,76,668/– மற்றும் அரசு மதிப்பு ரூ.28,10,501/–ஐ விட குறைவாக உள்ளது. மேலும், புறநகர் பேருந்துகள் கோவில் வழி பேருந்து நிலைதிலிருந்து இயக்கப்படுவதால், கலைஞர் பேருந்து நிலையத்திற்கு வந்துசெல்லும் பேருந்துகளின் எண்ணிக்கை குறைவதால், துறைமூலம் கட்டணங்கள் வசூல் செய்தாலும் பணியாளர் ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில், மற்றும் இக்குத்தகை இனத்திற்கு 18.12.2024 முதல் 21.03.2025 வரை ஏழுமுறை வரவழைக்கப்பட்ட பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலங்களில் வேறு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி / ஏலத் தொகை பெறப்படாததால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிற்க்க ஆண்டு குத்தகை தொகை ரூ.18,10,000/– அடிப்படையில் திரு.V.K.செந்தில்நாதன், திருப்பூர் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.
4. அட்டவணை வ.எண்.4ல் காணும் சின்னான் நகர் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.G.கோகுல கிருஷ்ணன், திருப்பூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ஆண்டுக்கு ரூ.1,61,000/– அளித்துள்ளார். இத்தொகை 2024–25ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.1,52,696/– மற்றும் அரசு மதிப்பு ரூ.1,60,331/– ஐ விட உயர்வு. மேலும், இக்குத்தகை இனத்திற்கு 18.12.2024 முதல் 21.03.2025 வரை ஏழுமுறை வரவழைக்கப்பட்ட பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலங்களில் வேறு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி / ஏலத் தொகை பெறப்படாததால் ஆண்டு குத்தகை தொகை ரூ.1,61,000/– அடிப்படையில் திரு. G. கோகுல கிருஷ்ணன், திருப்பூர் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.
5. அட்டவணை வ.எண்.05 S.V காலனி கட்டண கட்டண கழிப்பிடம் மற்றும் வ.எண்.06 வேலம்பாளையம் AVP ரோடு கட்டண கழிப்பிடம் ஆகியவை மண்டலம் எண்.01 உதவி ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள்.04.03.2025 மற்றும் 21.03.2025ன் படி உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளதால், புணரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் வரை பொது ஏல/ ஒப்பந்தப்புள்ளி இனங்களில் இருந்து 01.04.2025 முதல் நீக்கம் செய்ய மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது. (அ1 / 6314 / 2024 / அ1)

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

---

871) திருப்பூர் மாநகராட்சியின் மண்டலம் எண் – 03க்கு உட்பட்ட வார்டு எண் – 60ன் கோவில் வழி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான க.ச.எண்– 55/1 மற்றும் க.ச.எண்– 55/02க்கு (முத்தணம்பாளையம் கிராமம்) உட்பட்ட 4.85 ஏக்கர் பரப்பளவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் (MA IV) 08.12.2022ம் தேதிய 173 (எம்.எஸ்)ம் எண்ணிட்ட அரசாணையில் புதிதாக பேருந்து நிலையம் கட்ட ஆணையிடப்பட்டதன் பேரில் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படவுள்ளது.

மேற்படி பேருந்து நிலையத்தினுள் உள்ள கடைகள், உணவகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் போன்றவற்றை பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விட வருவாய் பிரிவின் மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள 20.03.2025ம் தேதிய குறிப்பில் அலுவலக உத்தரவு பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

இப்பேருந்துநிலையத்தினுள் தரைமுதல் தளங்களில் கடைகளும், கட்டண கழிவறைகள், கணக்கு/ நிர்வாக அலுவலக அறை, CCTV சேவை அறை, அறிவிப்புகள் வழங்கும் அறை, பலநோக்கு பயன்பாடு அறை மூன்று, அலுவலக அறைகள், வேலையாட்கள் தங்கும் அறை, இரவு நேர தங்கும் விடுதி அறைகள், பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை, ATM அறை பயணிகள் காத்திருப்பு அறை, பயணசீட்டுகள் வழங்கும் அறை, உணவகம், மருத்துவ சேவைக்கான அறை ஆகியவையும் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன

871–ன் தொடர்ச்சி

நிறுத்துமிடம் ஆகியவையும் கட்டப்பட்டுள்ளதன் விபரங்களும் அவற்றுக்கான அளவுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு :

1. இப்பேருந்து நிலையத்தினுள் கட்டப்பட்டுள்ள கீழ்கண்ட கடைகள், உணவகம், முதல் தள ஷோரூம்கள் ஆகியவற்றினை பன்னிரண்டு ஆண்டுகளுக்கான குத்தகை இனமாக ஒப்படைக்கும் நாள் ஒவ்வொரு ஆண்டுக்கும் 5 சதவீத உயர்வுடன் பிறப்பிக்கப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறையின் 06.08.2024ம் தேதிய 66ம் எண்ணிட்ட அரசாணையின்படியும் நகர்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023ன் கீழ் திருத்த சட்டம் 25/2024ன் பிரிவு 78(3)(iii)ல் குறிப்பிடப்பட்டவாறு நகராட்சி/ மாநகராட்சிகளின் வணிக மையங்கள் மற்றம் கடைகளுக்கு 12 ஆண்டுகள் வரை குத்தகைக்குவிட வழிவகை செய்யப்பட்டதன்படி மாதவாடகை அடிப்படையில் நடைமுறையில் உள்ள பொது ஒப்பந்தப்புள்ளி/பொது ஏல நடைமுறைகள் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு கலம்– 4ல் தெரிவிக்கப்பட்டுள்ள பொது ஒப்பந்தப்புள்ளி வைப்பு தொகை நிர்ணயித்து பொது ஏலத்தில் விட மாமன்றத்தின் அனுமதிக்கு.

வ. எண்	கடைகள் விபரம்	பரப்பளவு ச.அடி	வைப்புத் தொகை (இலட்சங்கள்)	குத்தகைக்கு ஒப்படைக்கப்படும் நாளில் செலுத்த வேண்டிய கூடுதல் மின்காப்பு தொகை (ரூ.)
1	2	3	4	5
MAIN BLOCK (கிழக்கு பகுதியில் உள்ள கட்டிடம்)				
GROUND FLOOR – தரைதளம் (தெற்கிலிருந்து வடக்காக)				
1	கடை எண்.01	161.40	2.00	10,000
2	கடை எண்.02	161.40	2.00	10,000
3	கடை எண்.03	161.40	2.00	10,000
4	கடை எண்.04	161.40	2.00	10,000
5	கடை எண்.05	161.40	2.00	10,000
6	கடை எண்.06	80.70	2.00	10,000
7	கடை எண்.07	80.70	2.00	10,000
8	கடை எண்.08	161.40	2.00	10,000
9	கடை எண்.09	161.40	2.00	10,000
10	கடை எண்.10	161.40	2.00	10,000
11	கடை எண்.11	161.40	2.00	10,000
12	கடை எண்.12	161.40	2.00	10,000
13	கடை எண்.13	161.40	2.00	10,000
14	உணவகம்	936.00	3.00	25,000
MAIN BLOCK (கிழக்குப்பகுதியில் கட்டிடம்)				
FIRST FLOOR முதல் தளம் (வடக்கிலிருந்து தெற்காக)				
East Side				
15	ஷோரூம் எண்.01	1205.12	3.00	25,000
16	ஷோரூம் எண்.02	887.70	3.00	25,000
17	ஷோரூம் எண்.03	855.42	3.00	25,000

வ. எண்	கடைகள் விபரம்	பரப்பளவு ச.அடி	வைப்புத் தொகை (இலட்சங்கள்)	குத்தகைக்கு ஒப்படைக்கப்படும் நாளில் செலுத்த வேண்டிய கூடுதல் மின்காப்பு தொகை (ரூ.)
1	2	3	4	5
West Side				
PARKING BLOCK (தெற்குப்பகுதியில் உள்ள கட்டிடம்)				
GROUND FLOOR – தரைதளம் (கிழக்கிலிருந்து மேற்காக)				
18	கடை எண்.01 (ஏ.டி.எம் அறை)	157.53	2.00	10,000
19	கடை எண்.02	196.91	2.00	10,000
20	கடை எண்.03	196.91	2.00	10,000
21	கடை எண்.04	196.91	2.00	10,000
22	கடை எண்.05	196.91	2.00	10,000
23	கடை எண்.06	295.36	2.00	10,000
24	கடை எண்.07	196.91	2.00	10,000
25	கடை எண்.08	196.91	2.00	10,000
26	கடை எண்.09	196.91	2.00	10,000
27	கடை எண்.10	196.91	2.00	10,000
28	கடை எண்.11	196.91	2.00	10,000
29	கடை எண்.12	196.91	2.00	10,000
CENTER BLOCK (மையப்பகுதியில் உள்ள கட்டிடம்)				
GROUND FLOOR – தரைதளம் (கிழக்கிலிருந்து மேற்காக)				
30	கடை எண்.01	87.16	2.00	10,000
31	கடை எண்.02	87.16	2.00	10,000
32	கடை எண்.03	87.16	2.00	10,000
33	கடை எண்.04	87.16	2.00	10,000
34	கடை எண்.05	87.16	2.00	10,000
35	கடை எண்.06	87.16	2.00	10,000
36	கடை எண்.07	87.16	2.00	10,000
37	கடை எண்.08	87.16	2.00	10,000
38	கடை எண்.09	87.16	2.00	10,000
39	கடை எண்.10	87.16	2.00	10,000

2. பேருந்து நிலையத்தினுள் கட்டப்பட்டுள்ள பொருள் பாதுகாப்பு அறை, இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் கட்டண கழிவறைகள் ஆகியவற்றை நடைமுறையிலுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 19.09.2008ந் தேதிய 181ம் எண்ணிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடைமுறையில் உள்ள பொது ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடவும் களம் 3ல் தெரிவித்துள்ள வைப்புத் தொகைகள் நிர்ணயித்து பொது ஒப்பந்தப்புள்ளி பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

871–ன் தொடர்ச்சி

வ. எண்	ஓராண்டு குத்தகை உரிம இன விபரம்	வைப்புத் தொகை (இலட்சங்கள்)	குத்தகைக்கு ஒப்படைக்கப்படும் நாளில் செலுத்த வேண்டிய கூடுதல் மின்காப்பு தொகை (ரூ.)
1	2	3	4
1.	மெயின் பிளாக் தரைதள பொருள் பாதுகாப்பறையில் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம்	2.00	10,000
2.	மெயின் பிளாக் (அ.) மெயின் பிளாக் தரைதளத்தில் உள்ள கழிப்பிடங்கள் ஆண்கள் – 3 எண்ணிக்கை பெண்கள் – 3 எண்ணிக்கை மாற்றுத்திறனாளிகள் – 2 எண்ணிக்கை (ஆ) மெயின் பிளாக் முதல்தளத்தில் தெற்குபுறம் உள்ள கழிப்பிடங்கள் ஆண்கள் – 4 எண்ணிக்கை பெண்கள் – 7 எண்ணிக்கை (இ) மெயின் பிளாக் முதல்தளத்தில் வடக்குபுறம் உள்ள கழிப்பிடங்கள் ஆண்கள் – 3 எண்ணிக்கை பெண்கள் – 3 எண்ணிக்கை மாற்றுத்திறனாளிகள் – 2 எண்ணிக்கை (ஈ) பார்கிங் பிளாக் தரைதளத்தில் உள்ள கழிப்பிடங்கள் ஆண்கள் – 5 எண்ணிக்கை பெண்கள் – 5 எண்ணிக்கை மாற்றுத்திறனாளிகள் – 2 எண்ணிக்கை (உ) சென்டர் பிளாக் தரைதளத்தில் உள்ள கழிப்பிடங்கள் ஆண்கள் – 5 எண்ணிக்கை பெண்கள் – 8 எண்ணிக்கை	5.00	25,000
3.	பார்கிங் பிளாக் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் தரைதளத்தில் கட்டிடத்தின் கிழக்குப்பகுதியில் உள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்த கட்டணங்கள் வசூலிக்கும் குத்தகை உரிமம் முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் – 225 வீதம் 550 எண்ணிக்கை இருசக்கர வாகனங்கள், மற்றும் தரைதளத்தில் கட்டிடத்தின் கிழக்குப்பகுதியில் 100 எண்ணிக்கை இருசக்கர வாகனங்கள் அல்லது 20 எண்ணிக்கை நான்கு சக்கர வாகனங்கள் ஒரு சமயத்தில் நிறுத்தலாம்.	10.00	25,000

871–ன் தொடர்ச்சி

வாகன நிறுத்துமிடத்திற்கான கட்டண விகிதங்கள்.

வ. எண்	வாகன இனம்	24 மணி நேரம் வரை கட்டணம்	24 மணி நேரம் கடந்து அடுத்த ஒவ்வொரு 24 மணி நேரம் வரை.
1.	இரண்டு சக்கர வாகனங்கள்	ரூ. 20 வீதம்	ரூ. 20 வீதம்
2.	நான்கு சக்கர வாகனங்கள்	ரூ. 50 வீதம்	ரூ. 50 வீதம்

3. மெயின் பிளாக் தரைதளத்தில் உள்ள தகவல் யைம் (Information Centre) (80.70 ச.அடி), டிக்கட் கவுண்டர் (80.70 ச.அடி), போக்குவரத்து அலுவலகம் (188.30 ச.அடி) மற்றும் நேரக்காப்பாளர் அறை (Time Zone) (87.16 ச.அடி) போக்குவரத்து கழகத்திற்கு, பொதுப்பணித்துறையின் வாடகை நிர்ணய படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட சதுர அடிக்கான வாடகை தொகை ரூ.19/– அடிப்படையில், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியிலிருந்து விலக்களித்து, நடைமுறையிலுள்ள அரசாணையின் படி மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடவும், மெயின் பிளாக் தரைதளம் காவல் கண்காணிப்பு அறை (161.40 ச.அடி), பார்க்கிங் பிளாக் தரைதளம் பயணிகள் காத்திருப்பு அறை மற்றும் டிக்கெட் கவுண்டர் (761.38), தாய்மார்கள் பாலூட்டும் அறை (196.91 ச.அடி) மற்றும் கிளினிக் (229.73 ச.அடி) ஆகியவை பொது ஏலம் தவிர்த்து பொதுவான இலவச பயன்பாட்டிற்கு விடவும், மெயின் பிளாக் முதல் தளம் கணக்கு / நிர்வாக அலுவலகம் (419.64 ச.அடி), சி.சி.டிவி. கண்காணிப்பு அறை (360.46 ச.அடி), அறிவிப்பு அறை (360.46 ச.அடி), பல்நோக்கு பயன்பாட்டு அறை (432.55 ச.அடி), அலுவலகம் –1, 2, 3 (112.98 ச.அடி வீதம்), டெர்மினல் பணியாளர் அறை (150.64 ச.அடி), நிர்வாக பிளாக் தரைதளம் உதவி பொறியாளர் அறை (486.86 ச.அடி), டெர்மினல் பணியாளர் அறை (425.02 ச.அடி) மற்றும் துப்புரவு ஆய்வாளர் அறை (460.53 ச.அடி) ஆகியவை அலுவலக பயன்பாட்டுக்காக பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏல இனங்களில் விடுவித்து வ.எண்.1 முதல் 2 வரையுள்ள இனங்களை பொது ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
